[illegible] [illegible] 1925–26
[illegible] 16 [illegible]

JL
R[illegible]
M26.16.7
186759

14 MAY 1926
MADRAS

Regd. No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

அக்ஷய வருஷம், 1925—1926. ஸம்புடம் 16.

சித்திரைமீ APRIL. ஸஞ்சிகை 7.



பத்ராதிபர். } காரியதர்சி. } ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.


1. பத்ராதிபரின் குறிப்புகள். 121
2. தர்மஸூக்ஷ்மம்.— ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் 125
3. ஆசார்யோபகாரம்.— ஸ்ரீ. உப. வே. டி. எஸ். தாதாசார்யர். 128
4. கடிதம்.— ஸ்ரீ. உப. வே. அநந்தாசார்யர். 134
5. போக்த்ராபத்யதிகரண பாடபேத விமர்சம்.— ஸ்ரீ. உப. வே. ந. நீலமேகாசார்யர். 137
6. ஒரு மஹானுடைய வார்த்தை,— ஓர் மஹான். 140
7. கடிதம்.— ஸ்ரீ. உப. வே. அநந்தராம அய்யங்கார். 141
8. ஸ்ரீமதாண்டவன், ஸ்ரீரங்கர்.— ஸ்ரீ. உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர். 142
9. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):— ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம். சே. நரஸிம்ஹமாசார்யர். 112
10. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்)— ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 209


Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam
K. R. Press, Madras.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6



## வந்து விட்டது.

புதிய சரக்கு!　　புதிய கடியாரம்!!

# டிக்டாக் வால்கிளாக்

இப்பொழுதுதான் வந்தது
மிக்க அழகுள்ளது.
காலத்திற்கு சரியான மணியை
காட்டக்கூடியது.

முந்துங்கள்!　முந்துங்கள்!!　முந்துங்கள்!!!

சுவற்றில் மாட்டக்கூடியது.
விலை 1-க்கு ரூ. 3 தான்
தபால் செலவு வேறு.

---

# இனாம்! இனாம்!!







இச்சமயம் தவறாதீர்கள்!!　சிலநாளைக்கு மாத்திரம்.!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ளைக்கட் லீவர் கடியாரம்விலை ரூ. 5-0-0 உள்ளது. உள்டையலின்மேல் ஐந்து வருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியானமணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். இச்சமயம் தவறாதீர்கள். சிலநாளுக்குமாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

[விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265, மதராஸ்.

MAY 1926
... OF BOOKS
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐய்யங்கார், எம். ஏ.
காரியதரிசி }

ஸம்புடம் [6.] அக்ஷய ஹு, சித்திரை மீ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேঽநவத்யா ॥

[ஸ்ரீபாகவதம் 1-9-28.

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

### முதலாழ்வார்களின் உபகாரம்.

(முன்தொடர்ச்சி).

என்று இவ்வர்த்தத்தை நிகமித்தருளினர். அதாவது கீழ்உண்டான பக்தி பரமபக்தியாகப் பரிணமித்தது என்றதாய் முடிந்தது.

இப்படி, சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொல்மாலை இடராழி நீங்குகவே, என்று ஏற்றப்பட்ட விளக்கினால் பக்தியுண்டாகி அது வ்ருத்தியடைய,

'தேஷாமேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம: ।
நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ॥'

என்கிறபடியே த்யானம் செய்பவர்களுக்கு அநுக்ரஹம் செய்வதற்காகப் பகவான் அவரவர்கள் மனதில் இருந்துகொண்டு அஜ்ஞானமாகிய இருட்டைப் போக்கடிப்பதற்காகப் பகவானால் உண்டாக்கப்படும் விசேஷமான ப்ரகாசத்தினால் 'தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்ஶநகாங்க்ஷிண:' என்கிறபடியே தேவதைகளும் காணமையால் நித்யம் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருக்கும் பகவானுடைய திருமேனியைப் பேயாழ்வார்



186759

கண்டு அதை அருளிச்செய்கிறார் மூன்றாவது திருவந்தாதியில். இப்படிப் பரமபக்தியுண்டானாலும் அது பரதத்வமல்லாத விஷயத்தில் இருந்ததாகில் நிஷ்பலமாகு மாகையினால் புருஷஸூக்தத்தில் கடைசி பாகத்தில் ‘ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ’ என்று நிரூபித்த ஆகாரத்தை முதல் முதலில் ‘திருக்கண்டேன்’ என்கிறார். ‘வெஷாஜ்ஞா ஸ்த ஸ்வஹிஷாம் ஊர்ஜஸ்ஹிதாரவியச வாசஸ்பதிர்ஹ ஸ்தாபதி’ என்கிறபடியே பரதத்வ நிர்ணயத்திற்கு ச்ரிய:பதித்வ சிஹ்நமிறே ப்ரதானமாக நிரூபிக்கப்பட்டது.

“திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கனணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று”

என்பது முதல் பாட்டு.

“யஸ் ஸத்த்வாஸ் ஸவதி கர்மெ யத்ர தேஹிந்ய ஹீஷாம்
ஜந்மஸ்வ ப்ரமயாவநா ஜஜ்ஞிரஜஜ்ஞிநாம் ।
தத்வ்யாணம் கிரிவி யதிநாம் ஏகலக்ஷ்யம் ஸமாயம்
வர்ணயம் தேஜ: ஸ்வாதி ஸவதீ வாகமாக்ஷா ரஸமக்ஷ்ய ॥”

(ஜகத்காரண ப்ருஹ்மம் சித் அசித் சரீரியாய்க்கொண்டு ஸ்ருஷ்டி முதலியவைகளைத் தன்ஸங்கல்பத்தால் செய்கிறது. யோகிகளால் த்யானிக்கத்தக்கதும், சுபமாயுமுள்ளது. இப்படிப்பட்ட அதுவும் உம்முடைய ஸம்பந்தமில்லாவிடில் திருவில்லாத் தெய்வமாகும். ப்ரயோஜனப் படமாட்டாது. ஆகையால் நீர் அவருக்கும் மேலானவள் என்று வைதிகர்கள் கூறுகிறபடியால் உம்மை ஸ்தோத்ரம் செய்கிறேன்) என்று ஸ்ரீதேசிகனும் அருளிச்செய்தார்.

இப்படிக் கீழ் இரண்டு திருவந்தாதிகளிலும் ஜகத் காரணத்வத்தாலும் பக்திக்கு லக்ஷ்யன் என்கிற ஆகாரத்தினாலும் நிரூபிக்கப்பட்டவன் ச்ரிய:பதி நாராயணன் என்றபடி. பகவான் தானும் தன்னை உள்ளபடியே காட்டுவது பக்திமான்களுக்கேயிறே. அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பனான பகவான், தானும் ஓர் அவஸரத்தில் ப்ரும்மசர்ய வேஷத்தை அபிநயிக்கும்போது, தம்முடைய வேஷத்திற்கு அநுகுணமாக லக்ஷ்மியை மறைக்கும்படி நேரிட ‘க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்யாந் வயவ்ரம் வக்ஷஸ்ஸ்தலம் ஶ்ரியம்’ என்றும், ‘மான்கொண்ட தோல் மார்பில் மாணியாய் மாவலிமண் தான்கொண்டு’ என்றும் சொல்லுகிறபடியே, பெரிய க்ருஷ்ணாஜிநத்தினால் அவளை மூடிக்கொண்டு அங்கிருந்தவர்களுக்குத் தோன்றினான். நவநீத சௌர்யத்தில் அகப்பட்டுக்கொள்ள, திருத்தாயார் அடிக்க ஆரம்பிக்க வாய் கைகளைத்துடைத்துக்கொண்டு தான் ஸாப்பிடவில்லை என்று சொல்லும்படி நேர்ந்தது. ஆழ்வாருக்கு ஸேவைஸாதிக்கும் பொழுது ‘வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான் பொய் கலவாது என்மெய் கலந்தானே’ என்கிறபடியே கொஞ்சமேனும் மறைக்காமல் அந்த வெண்ணெயின் சின்னங்களுடன் தோன்றினாற்போலே இங்கு இவர்களுக்கு ஸேவைஸாதிக்கும் பொழுதும்,



“பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரயதாச்ரமம் த்வம்
க்ருஷ்ணாஜிநேந யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா: ।
வ்யக்தாக்ருதே தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம்
நாராயணம் பவந்தமமீ ஜநா விதந்தி ॥”

(திருக்கோவலூருக்கு நாயகனான தேவரீர் பிக்ஷைவாங்குவதற்கு யோக்யமான ப்ருஹ்மசர்ய ஆச்ரமத்தை ப்ரகாசம் பண்ணிக் கொண்டிருந்ததால் பெரிய பிராட்டியாரை க்ருஷ்ணாஜினத்தால் மறைத்தீர். ப்ரகாசமான ஆகாரத்தையுடைய தேவரீருடைய இரண்டு புஜங்களுக்கு நடுவில் (மார்பிலே) அந்த லக்ஷ்மியைப் பார்த்து அந்த ஜனங்கள் தேவரீரை நாராயணனென்று அறிந்தார்கள்).

என்கிறபடியே பிராட்டியை மறைக்காமல் வ்யக்தமாகக் காட்டிக்கொண்டு நிற்க, அதை அநுஸந்தித்து ‘திருக்கண்டேன்’ என்கிறார். இப்படி லக்ஷ்மீபதித்வத்தை முன்பே காட்டாவிடில் ‘திருவில்லாத்தேவரைத் தேறேல்மின்தேவு’ என்கிற நிஷ்டையுடையவர்களாகையினால் இவனைப் பரதத்வமாக நிர்ணயித்திருக்கமாட்டார்கள் என்பதும் த்யோதிதம். இதற்குமேல் பிராட்டியின் ஸ்வரூபமானது, பகவானுடைய நீலமேக ச்யாமளமான நிறத்தை மூடித் தன்னுடைய ஸ்வர்ணச்சாயையை வீச அதை அநுபவிக்கிறார் ‘பொன்மேனி கண்டேன்’ என்று; இப்படியே சங்கம் சக்ரம் முதலிய பரத்வ லக்ஷணங்களையும் தாம் கண்டபடியே அருளிச்செய்திருக்கிறார்.

இப்படி ச்ரிய:பதித்வத்தினால் ஏற்பட்ட பெருமையைப் பரக்க நிரூபித்து நமக்கு ச்ரிய: பதியான எம்பெருமானைத் தவிர வேறு ஒருவரும் சார்வு ஆகமாட்டார்கள் என்று நிகமித்தருளுகிறார் கடைசிப் பாட்டில்.

சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் தண்துழாய்த்
தார் வாழ்வரைமார்பிற்றான் முயங்கும்—காரார்ந்த
வானமருமின்னிமைக்கும் வண்தாமரை நெடுங்கண்
தேனமரும் பூமேல் திரு.

இதன்கருத்து—சக்ராயுதத்தைத் தரித்துக்கொண்டும் திருத்துழாய் மாலையைச் சூடிக்கொண்டும் கறுத்த பெரியமேகத்தின் நடுவில் ஒருமின்னலைப்போன்ற பகவானுடைய திருமார்பில் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மியே நமக்கு என்றும் உபாயதசையிலும், உபேயதசையிலும் சார்வு என்பது.

ஆக இப்ரபந்தம் மந்திர ரத்னமான த்வயத்தின் விவரணமாய் நின்றது. இப்படி இந்த மூன்று ஆழ்வார்களும், பரதத்வம் இன்னார் என்பதையும், அவனை அடைய உபாயம் இன்னது என்பதையும் நிரூபித்தார்கள்.

இப்படி நமக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான தத்வஹிதங்களை ஸங்க்ரஹித்தருளின இவ்வாழ்வார்கள் செய்த இந்த உபகாரத்தை

“பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள்தருமாயன்மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள்செக நான்மறையந்தி நடைவிளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டு மிம் மெய்விளக்கே’

என்று ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில் ஆசார்யன் அருளிச்செய்தார். லோகத்தில் ஸாதாரணமாக விளக்குகள் ஏற்றப்பட்டால் எந்த இடத்தில் ஏற்றப்பட்டனவோ அந்த இடத்தில் மட்டும் இருட்டைப்போக்கி அதற்கு அருகாமையிலுள்ள வஸ்துக்களைப் ப்ரகாசம் செய்யும். இந்த விளக்கோ ஏற்றியது ஒரு வீட்டின் இடைகழியில், இருள் நசித்தது நாட்டில், வஸ்து ப்ரகாசித்தது நான் மறையந்தி நடையில். ஆகையினால் இந்த விளக்கின் ப்ரபாவாதிசயம் த்யோதிதம்.

‘தீபே ந கேந விதிநா ஸுஜநாதிஸீம்ய
ஸேஹாவஹ வரிஸரஜ்ஜநணாவிபூதெ ந ।
உஹூாவகாஸநிலிஷம் ஹுதயஸர ஹுவஹம்
ஸூாயூாயயோம நயநா: ஸாஉயஃ கவீந்ரா: ॥’

(வேதங்கள், யோகம் இவைகளைக் கண்களாக உடையவர்களும், பரிசுத்தமானவர்களும், கவிச்ரேஷ்டர்களுமான முதலாழ்வார்கள், ஸ்நேஹமான எண்ணெயுடன் கூடின சுத்தமான குணங்களாகிற திரியினாலே ஏற்றப்பட்டதான விளக்கின் காந்தியால் நடுராத்திரியில் ஹ்ருதயத்தில் மிகவும் அல்பமான ஸ்தானத்தில் நெருக்கிக்கொண்டிருக்கும் தேவரீரைப் பார்த்தார்கள்) என்கிற ஸ்ரீதேஹளீசஸ்துதியையும் இங்கநு ஸந்திப்பது.’ பாட்டுக்குரிய பழையவர்’ என்பதினால் இவர்கள் நித்யஸூரிகளின் அவதாரம் என்பது ஸூசிப்பிக்கப்படுகிறது.



ஆக இப்படி, ‘ஸ்வப்ராப்தயே ஸ்வயமஸௌ ஸ்வயமேவ ஸாயநதயா தவாஸ்ரு ஸ்ரீணா: ப்ருதனா’, என்றும், ‘ உபாய: ஸ்வப்ராப்தே ரவ நிஷ்டியீத ஸஹஜவாநு ப்ராஸமெத்து தமேஹாகெது ஷுவதந நிஷியாஸநமதீ’ என்றும், ‘தேவ: ஸ்ரீமாநு ஸ்வஸிலெ: காணநிதிவதெநக உயஹம’ என்றும் உபய வேதாந்தங்களின் ஸாரமாக நிஷ்கர்ஷிக்கப்பட்டதான பகவானுடைய திருவடிகளை அடைவதற்கு அவன்தானே உபாயம் என்கிற அர்த்தத்தை ஸ்பஷ்டமாக நிரூபித்தருளி, நமக்கு உபகாரம்செய்திருக்கும் முதலாழ்வார்கள் விஷயத்தில் நாம் மிகவும் க்ருதஜ்ஞதையுடன் இருக்க ப்ராப்தம்.

---

ஸ்ரீ:.

# தர்ம ஸூக்ஷ்மம்.

(ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

(முன்தொடர்ச்சி.)

அந்த அர்த்தங்களாவன 1-ருச்யச்ருங்க மஹரிஷியினால் செய்விக்கபபடா நின்ற ஸ்ரீதசரதசக்கிரவர்த்தியின் புத்திர காமேஷ்டியாகத்தில் ஹவிர்ப்பாகம் பெறுவதற்காகவந்து ஒன்றுசேர்ந்திருந்த பிரம்மாதி தேவர்கள் அனைவரும், தர்ம த்ரோகிகளாகவும், ஸாதுஜன ஹிம்ஸகர்களாகவு மிருக்கிற ராவணன் கும்பகர்ணன்முதலியவர்களை வதம்செய்து ஸாதுக்களையும் தர்மத்தையும் ரக்ஷிப்பதற்காகப் பாகவதோத்தமரான தசரதசக்கிரவர்த்திக்கு நான்குவித ரூபத்துடன் புதல்வனாக அவதரித்தருள வேண்டுமென்று சரணாகதிசெய்ய, அந்த சரணாகதிக்கு இணங்கி ஸ்ரீபரமபுருஷன், அவ்விதமேநான் இந்தபுத்திரகாமேஷ்டியாகத்தில் யஜமானனான தசரதனுக்கு நான்குவித உருவமெடுத்துப் புதல்வனாகத்தோன்றி, லோக கண்டர்களான ராவணாதிகளை வதம்செய்து தர்மஸம்ஸ்தாபனம் செய்கிறேன் என்று ப்ரதிஜ்ஞைசெய்து மறைந்துபோகவே, அப்பொழுது சதுர்முகனான ப்ரஹ்மதேவன், இந்திரன்முதலிய தேவர்களனைவரையும் நோக்கி, துஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்டர்களையும் தர்மத்தையும் பரிபாலிப்பதற்காக அவதரிக்கப்போகிற ஸ்ரீமந்நாராயணனுக்கு யுத்தத்தில் உதவிபுரிவதற்காக, நீங்கள் எல்லோரும் தம்தம் அம்சத்தால் அளவிறந்த வல்லமை வாய்ந்த வானரவீரர்களை அப்ஸரஸ் ஸ்திரீ முதலிய ஸ்திரீகளிடங்களில் பிரவேசித்து உண்டுபண்ணுங்களென்று ஆஜ்ஞையிட, அந்த பிரஹ்மதேவர்ஙியமனத்தைத் தலைக்கட்டவேண்டியே இந்திராதிதேவர்கள்வாலிமுதலிய

வானரவீரர்களை உண்டுபண்ணியிருக்க, வாலி எதற்காகத்தான் புவியில்தோன்றினனே, அந்தபரமதேவ ரஹஸ்யத்தை முற்றிலும்மறந்து அதற்கு நேர்விருத்தமாக, தேவ சத்துருவான ராவணனுடன் அக்கினி ஸாக்ஷிகமாக ஸக்கியம் செய்துகொண்டு தர்மத்ரோகியான ராவணனை ரக்ஷிக்கமுயன்று (' நாம் உத்தேசித்த கார்யம் வீணாகப்போய்விட்டதே, நாம் இனி என்ன செய்யப் போகிறோம், பிரஹ்மதேவன் பக்கலில் நாம் அளித்த வாக்கு அஸத்யமாயிற்றே') என்று தேவர்களனைவர்களையும் இயங்கச்செய்து தேவ கார்யத்தை அடியோடு அழிக்கத்தொடங்கின பாபியானதால் இவனைக்கொல்வது ந்யாயம் என்பதுதான் ஸ்ரீராமபிரான் திருவுள்ளம்—இது ஒன்று.

(2) இரண்டாவது:— 'யஸ்ய நிஶ்வஸிதம் வேதா:' (வேதங்கள் எந்த மஹாபுருஷனுடைய மூச்சுக்காற்றோ) என்கிற வசனத்தின்படி மனிதனுடைய முயற்சியின்றித் தன்படியாக வெளிவருகின்ற மூச்சுக்காற்றைப்போல் பரமபுருஷனுடைய ப்ரயத்நமின்றி அவனிடமிருந்து தானாகவெளி வருவது பற்றி அபௌருஷேயமென்று பிரஸித்திப்பெற்றதும், பகவதாஜ்ஞாரூபமுள்ள வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிற விசேஷ தர்மங்களையும் ஸாமான்ய தர்மங்களையும் அனுஷ்டித்து உலகத்தோருக்குக் காட்டுவதற்காகவே அவதரித்த ஸ்ரீராமபிரானுக்கு 'ஸத்யம் வத, தர்மம் சர' என்கிற விதி வாக்யார்த்தானுஷ்டானம் முக்கிய தர்மமானது. ஸூர்யவம்சத்தில் உதித்த ஸ்ரீராமபிரானுக்கு ஸாக்ஷாத் ஸூர்யபுத்திரனை ஸுக்ரீவனும் அவனுடைய பத்நீயான ருமையும் பிதாமாதாக்கள். தனக்கு பிதாவான ஸுக்ரீவன் நிரபராதியாக இருக்க, தேஹபலச் செருக்காலும் காமக்ரோத வேகத்தாலும் அவனை வாலி துரத்தித் துரத்தி யடித்து, அக்கிரமமாக அவனுடைய கிருஹாராமக்ஷேத்ராதிகளையும் அவன் பத்நியையும் அபஹரித்தான். ஸுக்ரீவன் உயிரோடிருக்கும் தருணத்தில் அவன் பத்நியை இவன் கைக்கொண்டதும் வானர ஜாதிமுறைக்கும் இயலாதது. "அக்நிதோ கரதஶ்சைவ ஶஸ்த்ரபாணிர் தநாபஹ:। க்ஷேத்ரதாராபஹாரீ ச ஷடேதே ஆததாயிந:" (வீட்டில் நெருப்பு வைப்பவன், அன்னத்தில் விஷமிடுபவன், காரணமின்றி ஆயுதத்தை கையில்கொண்டு பிறரை ஹிம்ஸிப்பவன், ஒப்புவித்த பொருளை அபஹரிப்பவன், தான்யங்கள் விளையக்கூடிய நல்ல வயல்களை கைப்பற்றிக்கொள்பவன், பார்யையை அபஹரிப்பவன்) என்ற இவ்வாறு பேர்களும் ஆததாயிகளென்று கூறப்படுகிறார்கள். இந்த வாலியானவன், தம்முடைய தர்மபிதாவான ஸுக்ரீவனுடைய



பார்யையை அபஹரித்ததால், இவன் ஸுக்ரீவன் விஷயத்தில் தாரஹரனை ஒருவித ஆததாயி. ஆததாயிகளென்கிற குற்றவாளிகளை 'ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதேவாவிசாரயந்' என்கிற சாஸ்திரப்படி விசாரியாமலே வதம் செய்யலாம். அதை மனதில் கருதியே ஸ்ரீராமபிரான் தன் தர்ம மாதாவான ருமையை அபஹரித்து, தன் தர்மபிதாவான ஸுக்ரீவ மகாராஜாவுக்கு மகாபராதத்தைச்செய்து ஆததாயியாக இருக்கிற வாலியை விசாரியாமலே ஒரு பாணத்தால் வதம் செய்து தர்மபிதாவான சுக்கிரீவமஹாராஜா விடத்திலுள்ள பக்தியை ஸ்ரீராமபிரான் வெளியிட்டார்.

3-மூன்றாவது:— ருச்யமூகபர்வதத்தில் ஸ்ரீராம சுக்ரீவர்கள் இருவருக்கும் அக்னிஸாக்ஷிகமாக ஸக்கியம் ஏற்பட்டவுடன், 'வாலிநோ மே மஹாபாஹோ பயார்த்தஸ்யாபயம் குரு। கர்த்துமர்ஹஸி காகுத்ஸ்த பயம் மே ந பவேத்யதா॥' என்று வாலியினிடத்திலிருந்து உண்டாயிருக்கிற பயத்தால் நடுக்கமுற்ற ஸுக்ரீவன் ஸ்ரீராமபிரானிடத்தினின்று அபயத்தைவேண்டவே, உடனே அவனுடைய ஆர்த்தியைக்கண்ணுற்ற பரமபுருஷன் ஆச்ரிதரக்ஷணரூபமான ஆந்ருசம்ஸ்யகுணத்தை முன்னிட்டு, 'வாலிநம் தவ வத்ஸ்யாமி தவ பார்யாபஹாரிணம்। அமோகாஸ்ஸூர்யஸங்காஶா மமைதே நிஶிதாஶ்ஶரா:। தஸ்மிந் வாலிநி துர்வ்ருத்தே நிபதிஷ்யந்தி வேகிதா:॥' என்று சுக்ரீவனுக்கு அபயப்ரதானம் செய்து வாலிவதத்தை ப்ரதிஜ்ஞைபண்ணிக் கபிராஜ்யாதிபத்யத்தையுமளித்தார்.

'ஸம்ஶ்ருத்ய ச ந ஶக்ஷ்யாமி ஜீவமாந: ப்ரதிஶ்ரவம்। முநீநாமந்யதா கர்த்தும் ஸத்யமிஷ்டம் ஹி மே ஸதா॥ அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம்। ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத:। ததவஶ்யம் மயா கார்யம் ருஷீணாம் பரிபாலநம்। அநுக்தேநாபி வைதேஹி ப்ரதிஜ்ஞாய து கிம் புந:॥' என்று சொல்லியவண்ணம் ஸாது ஸம்ரக்ஷண ப்ரதிஜ்ஞாரக்ஷண வ்ரதத்தில் தீக்ஷிதரான ஸ்ரீராமபிரான், தனக்குப் பரம ஸுஹ்ருத்தாயும் ஹிதைஷியாயும் ஆபத்பந்துவாயும் பித்ரு ஸ்தானீயனாகவுமிருக்கிற ஸுக்ரீவனுக்கு, தான் கொடுத்த அபயப்ரதானத்தையும், வாலிவத ப்ரதிஜ்ஞையையும், கபிராஜ்யாதிபத்ய ப்ரதானத்தையும் பாதுகாக்கவேண்டியே தர்ம த்ரோகியும், தன் குரு த்ரோகியும், தேவகார்ய விகாதகனுமான வாலியை ஸம்ஹரித்தார். அங்ஙனமாகில் நேரில் வந்துநின்று யுத்தம்செய்தே வாலியைக்கொன்றிருக்கலாம்,

மறைந்து வதம் செய்தது பொருத்தமுள்ளதாக ஆகுமோ என்று சில ஹைதுகர்கள் சோத்யம் செய்வார்கள். அதற்கு உத்தரமாவது:— ஸ்ரீராமபிரான் இவ்வண்ணம் மறைந்திருந்து பாணப்ரயோகம் செய்தது வாலியினிடத்திலிருந்து உண்டான பயத்தினாலன்று; பதினாலாயிரம் அரக்கர்களை ஒரு முகூர்த்தத்தில் ஸம்ஹரித்த மகாவீரனுக்கு இந்த சாகாம்ருகத்தை வதம் செய்வது ஒரு பொருட்டா! அல்ல; நேரில்வந்து போர்புரியும் பக்ஷத்தில் வாலி, தன்னுடைய அமானுஷவிக்கிரமத்துக்கு அஞ்சி ஓடினாலும், அல்லது தன்னைச் சரணமடைந்தாலும் அவனைக் கொல்லாமலிருக்கும்படி நேரிடும்; அப்படி நேரிட்டால், தான் சுக்ரீவன் விஷயத்தில் செய்த அபயப்ரதானத்திற்கும் வாலிவதப்ரதிஜ்ஞைக்கும் கபிராஜ்யாதிபத்யதானத்திற்கும் விரோதம் வருவதுடன் தன்னுடைய சத்ய ஸந்தத்வமும் அழிந்தேவிடும்; இது முதலிய அநேக பாகவங்களை உள்ளடக்கிக்கொண்டிருக்கிற மஹார்க்கமான ஒருவசன ரத்தினத்தை அதாவது '[illegible] ॥' என்பதைவாலியின் ப்ரச்னங்களுக்கு உத்தரமாக அறிந்திருக்கிறார் என்று அபிஜ்ஞர்கள் பகர்கின்றனர். அதிகம் இன்னும் எழுதினால் வ்யாஸம் விரிவாகும் என்று பயந்து இத்துடன் இதை உபஸம்ஹரிக்கிறேன்.

---

ஸ்ரீ:

# ஆசார்யோபகாரம்.

[ஸ்ரீ. உப. வே. டி. எஸ். தாதாசார்யர்.]

இந்த லோகத்தில் ஈச்வர ஸ்ருஷ்டியில் ஜீவராசிகள், மனுஷ்யன் என்றும், ம்ருகம் என்றும், திர்யக் என்றும் பல வகுப்பாக இருக்கின்றன. இவைகளில் நிரம்பவும் ச்ரேஷ்டமானது மனுஷ்ய ஜன்மம். இதற்குள்ள ஏற்றம் எது என்றால் ஜ்ஞானம் என்பதுதான். இப்பேர்ப்பட்ட ஜ்ஞானத்தால் நமக்கு ஏற்பட்ட ஸௌகர்யம் என்ன? ஒவ்வொரு மனுஷ்யனும் தான் ஒரு கார்யம் செய்ய ஆரம்பிக்கும் காலத்தில் 'நான் இந்தக்கார்யம் என்ன பலத்துக்காகச் செய்கிறேன்? அது செய்யாமலிருந்தால் என்ன கெடுதல்? நான் செய்கிற கார்யத்தை எப்படிச் செய்யவேண்டும்? இதுவரை ஏன் செய்யாமல் இருந்தேன்?'' என்று இவை முதலியவற்றை விசாரித்துக்கொண்டுதான் ப்ரவ்ருத்திக்கிறான். எப்படி இருந்தபோதிலும் புத்திசாலியாக உள்ளவன் இவைகளைக் கவனித்துத்தான் ப்ரவ்ருத்திக்கவேண்



டும். அதே மாதிரி நாம் இந்த லோகத்தில் ஜனித்து வாழ்நாட்கள் கழித்து வருகிறோமே. எதற்காக ஜனித்தோம்? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எங்கே போகவேணும்? நாம் இதுவரை போகவேண்டிய இடத்துக்கு ஏன்போகாமலிருக்கிறோம்? அங்கே போனால் நமக்கு என்ன ஸௌகர்யம்? போகாமலிருந்தால் என்ன கெடுதல்? என்ன செய்தால் அந்த இடம் போகலாம்? என்று இவை முதலானவற்றைக் கவனிக்கவேணும். ம்ருகமாவது திர்யக்காவது இதைக் கவனிக்கமுடியாது. மனுஷ்யன் ஒருவன்தான் கவனிக்கமுடியும். இதுதான் மனுஷ்யருக்கும் மற்ற ஜீவராசிகளுக்குமுள்ள வித்யாசம். இப்படி இந்த விஷயமான ஜ்ஞானத்தை ஸம்பாதிக்காதவனைத் தான் 'ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:' என்று சொல்லுகிறது. இதை அறியாதவன் ம்ருக ப்ராயந்தான்.

இப்படி இந்த விஷயங்களைக் கவனியாமல் நம்மில் பெரும்பான்மையோர், இந்தச் சரீரம் இருக்கும் வரையில் சரீரத்துக்கு ஆடை ஆபரணம் முதலியவை போட்டு அலங்காரம் செய்வதும், இந்தச்சரீர சம்பந்தத்தால் உண்டான பெண்சாதி, பிள்ளை, பந்துக்கள், ஸொத்து, ஸுகம் என்று இவைகளையே கவனிப்பதும், அவைகளின் அபிவ்ருத்திக்கு வேண்டிய பணம் சம்பாதிப்பதும் இது முதலானவற்றையே தம் வாழ்நாள் பூராவும் கவனிக்கிறார்கள். இந்த லோகத்தில் நமக்குள்ள அபிமானம் பூராவும் நம் தேஹத்தையும் இந்தத் தேஹ ஸம்பந்தமாயுள்ளதையும்பற்றித்தான். இந்தத் தேஹம் ஒரு நாள் அழிந்துவிடுகிறது. இதையும் நாம் பார்க்கிறோம். பிற்பாடு அதைப்பற்றிக் கவனிப்பவர் ஒருவருமில்லை. அப்படி அழியும் காலத்தில் அவன் பாடுபட்டு தேடிச் சேகரித்து வைத்த ஸொத்து யசஸ் பெருமை யெல்லாவற்றையும் திடீரென்று விட்டுவிட்டு இறந்துபோய்விடுகிறான்; அவன் வைத்துவிட்டுபோன ஸொத்தை அவன் பெண்சாதி அனுபவித்தாலும், பிள்ளைகள் அனுபவித்தாலும், அன்னியன் அனுபவித்தாலும் ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை. யார் அனுபவித்தால் அவனுக்கு த்ருப்தி! ஒருவன் தேஹத்தைவிட்டுப் பிரிந்த பிறகு தான் தேஹத்தோடிருந்தகாலம் தான் ஸம்பாதித்த ஸொத்தை யார் அனுபவித்தாலும் அதனால் அவனுக்கு ஸந்தோஷம் என்பதும் கிடையாது. அத்ருப்தி என்பதும் கிடையாது. முன் ஜன்மத்தில் நாம் சம்பாதித்துவைத்துவிட்டு வந்திருக்கிறோமே அந்த ஸொத்தை நாம் விட்டுவிட்டுவந்த பிள்ளை அனுபவிக்கிறதா? பெண்சாதி அனுபவிக்கிறாளா? சுற்றத்தார் அனுபவிக்கிறார்களா? அப்பேர்ப்பட்ட அனுபவங்களால் நமக்கு ஏதாவது ஸந்தோஷமாவது வியசனமாவது அல்லது அது விஷயமான கவலையாவது ஏற்படுகிறதா? ஒருவருக்கும் ஒன்றும்கிடையாது. அதே மாதிரி இந்த

ஜன்மத்தில் நாம் ச்ரமப்பட்டுச் சம்பாதித்து வைத்துப் போகப்போகிற ஸொத்தை யார் அனுபவிக்கப்போகிறார்கள் என்கிற கவலை இந்தச் சரீரம் போனபிறகு நாம் படப்போகிறதில்லை. ஸொத்தை வைத்துவிட்டுப்போனாலும் நம்முடைய பெண்டுபிள்ளைகள் சந்தோஷமாக இருக்கும்படி செய்துவிட்டுப்போனாலும் நமக்கு ஸந்தோஷமில்லை. பணம் இல்லாமல் ஏழையாக நம்முடைய பெண்டுபிள்ளைகளைக் கஷ்டப்படும்படிவிட்டுவிட்டுப் போனாலும் இதனால் இந்தச் சரீரம் போனபிறகு நமக்கு வ்யஸநமுமில்லை. இதைக்கொஞ்சம் கவனித்தோமானால் நாம் இந்தத் தேஹபோஷணம் செய்வதினாலும், ஆடை ஆபரணம் தரிப்பதினாலும், ஸொத்து ஸம்பாதிப்பதினாலும் எவ்வித உபயோகமுமில்லை. த்ருப்தி எல்லாம் இந்தச் சரீரம் போகிறவரையில்தான் இருக்கிறது. அதிலும் சிலர் தமக்கு வாழ்நாள் முழுவதும் நன்றாய் அனுபவிப்பதற்கு ஏராளமான ஸொத்து இருந்தபோதிலும், தமக்குப்பின் அதை அனுபவிப்பதற்குப் பெண், பிள்ளை ஒருவரும் இல்லாமலிருந்தபோதிலும், தானும் நன்றாக அனுபவியாமல் இன்னும் பணத்தை மேல்மேலும் சேகரித்து வைத்துவிட்டு இறந்துபோய் விடுகிறார்கள். ஐயோ! இதனால் என்ன உபயோகம். வீண் ப்ரயாஸம் தான். நாடகசாலையில் வேஷம் தரித்து ஆடுகிறவனுக்கும்கூட அந்த வேஷம் முடிந்து கொஞ்சகாலம் 'நாம் நன்றாக இருந்தோம், எல்லோரும் நம்மை ச்லாக்யமாகப்புகழ்ந்தார்கள்" என்கிற ஒரு ஸந்தோஷம் இருந்துவருகிறது. ஜீவனுக்கோவென்றால் முந்தின ஜென்மத்தில் என்னவாக இருந்தோம் என்கிற ஞாபகமேகிடையாது. ஸ்வப்நாவஸ்தை மாதிரி இருக்கிற இந்த ஜன்மத்தில் நம்முடைய வாழ்நாள் கொஞ்சகாலம்தான் என்று நாம் நன்றாக அறிந்தும் என்ன வீண் ச்ரமப்படுகிறோம்.

பசு ம்ருக பக்ஷியாதிகள் இந்த விஷயத்தில் நம்மைக்காட்டிலும் நிரம்பவும் ச்லாக்யமானவைகள். அவைகள் பின்னுள்ளவைகளுக்குச் சேகரித்து வைப்பதில்லை. இது ஈச்வரன் செயல். சரீரம் இருந்த காலம் நம்முடைய குடும்ப ரக்ஷணத்துக்காக என்ன செய்வோம் என்று கொஞ்சமும் சலிக்கவேண்டியதே இல்லை. நம்முடைய ராஜாங்கமுறையில் ஒவ்வொரு வருஷத்திலும் மார்ச்சுமீ 31உக்குமுன் ஓர் ஏற்பாடு செய்கிறார்கள். அதாவது ஏப்ரல்மீ 1உ முதல் அடுத்த வருஷம் 31உ முடிய ராஜாங்கத்தில் ஒவ்வொரு இலாகாவுக்கும் எவ்வளவு தொகை செலவாகுமென்று தீர்மானித்து அந்தந்த இலாகா தொகைக்குமேல்போகாமல் அந்தந்த இலாகா அதிகாரிகளைச் செலவிடும்படி உத்திரவு இட்டுவிடுகிறார்கள். அப்படி செய்வதில் உதாஹரணமாகத் திருச்சினாப்பள்ளி ஜயிலுக்கு அடுத்த



வருஷம் மார்ச்சுமீ 31உ முடிய ரூ. 50,000 கொடுத்திருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அப்படி கொடுத்திருக்கிற பணத்தை வைத்து அந்த ஜயிலுக்கு அனுப்புகிற கைதிகளுக்கு ஆகாரம் கொடுத்துவருகிறார்கள். பிப்ரவரிமீ 20உயுடன் அந்த ரூ. 50,000 மும் செலவழிந்து விட்டதனால் 21உ முதல் ந்யாயாதிபதி ஒருவரையும் அந்த ஜயிலுக்கு அனுப்பமாட்டார். அனுப்பினால் அந்த ஜயில்காரன் 'என்னிடம் பணமில்லை' உள்ளே எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிடுவான். இப்படி மனுஷ்யன் செய்கிற ராஜாங்கமுறையில் இவ்விதம் இருக்குமானால் ஸர்வேச்வரன் செய்கிற ராஜாங்கமுறையில் எவ்விதமிருக்கவேண்டும்? ஒவ்வொரு ஜீவாத்மாவையும் அவர்கள் செய்த பாபமாகிய குற்றத்திற்காக சிக்ஷித்து ஜயிலுக்கு அனுப்புகிறான். அந்த ஜயில்தான் நாம் எடுக்கும் ஜன்மம். இந்தச் சரீரமாகிய விலங்குடன் இந்த லோகமாகிய ஜயிலுக்கு நம்மை அனுப்புவதற்கு முன் நமக்குவேண்டிய ஆகாரத்தை இவ்வுலகத்தில் பட்ஜட் (Bud get) போட்டுவைத்துவிட்டுத்தான் நம்மை இவ்விடத்தில் ச்ருஷ்டிக்கிறான். ஆனதால் இந்த ஜன்மம் எடுத்தபிறகு சரீரத்தை வளர்ப்பதற்கு நாம் என்ன செய்வோம்? எப்படி சம்பாதிப்போம்? எங்கே ஓடுவோம்? அந்ய மதத்தில் சேருவோமா? தேவதாந்தர பஜனம் செய்வோமா? நம்போலொத்த வேறு மனிதன் காலிலே விழுவோமா? என்று கொஞ்சமேனும் கவலைப்படவேண்டாம். ஈச்வரன் நமக்கு ஏற்படுத்தியிருந்த பட்ஜட்டிலிருந்தே நம்மை வளர்க்கிறான். இத்தையே பெரியோர்கள்,

> 𑌆𑌯𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌨𑌿𑌧𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
> 𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌸𑍃𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌥𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ॥

(ஒருவனுக்கு அவன் கர்ப்பத்திலிருக்கும்போதே அவனுடைய ஆயுள், அவன் செய்யப்போகும் கர்மம், அவன் ஸம்பாதிக்கும் பணம், படிப்பு, அவனுடைய சரீரநாசம் இவ்வளவும் ச்ருஷ்டிக்கப்படுகின்றன.)

> 𑌯𑍋 𑌮𑍇 𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
> 𑌶𑍇𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍁𑌪𑍍𑌤𑌃 𑌸𑍋𑌽𑌥𑌵𑌾 𑌮𑍃𑌤𑌃 ॥

(எந்தப் பகவான் கர்ப்பத்திலிருக்கிற எனக்கு ஜீவனத்தை ஏற்படுத்தினானோ அவன் மற்ற மிகுதியான வ்யாபாரங்களைச் செய்விப்பதில் தூங்கிவிட்டானா, அல்லது வேறு இடத்துக்குப் போய்விட்டானா) என்றும் சொல்லுகிறார்கள்.

ஸ்ரீபாஷ்யகாரரும் 'தேஹயாத்ரை கர்மாதீனம், அதைப்பற்றிக்கரைதல் வேண்டாம்' என்றருளிச்செய்தார்.

இப்படி நாம் சரீரத்தைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலைப்படாமல் நிர்விசாரமாக இருக்கவேண்டியிருக்க, இதை அறியாமல் அல்லும் பகலும் இது தவிர வேறு கவலை இல்லாமல் ஸதா இந்தச் சரீர ஸம்பந்தமான விஷயமாகவே யாதனைப்படுகிறோம். நம்மிடத்தில் இந்தச்சரீரம் தவிர, கண்ணால் காண முடியாத ஆத்மா என்று ஒன்று இருக்கிறது என்றும், அது நித்யமானதென்றும், அதற்கு ஒருகாலும் அழிவு இல்லை என்றும், அது நிரம்பவும் பலவிதத்திலும் கஷ்டப்படுகிறது என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்களே! இது வாஸ்தவமா? இந்த ஆத்மா நித்யம் தானா? இது நாம் இந்தச் சரீரம் எடுப்பதற்கு முன் எங்கே இருந்தது? எதற்காக இந்தச் சரீரத்துக்குள் வந்திருக்கிறது? இது கஷ்டப்படுகிறதா சுகப்படுகிறதா? கஷ்டப்படுகிறதானால் இதற்குச் சுகப்படுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? இதற்கு ஸுகம் என்பதுதான் என்ன? அந்த ஸுகத்தை ஸம்பாதிப்பதற்கு நாம் என்ன உபாயம் தேடவேண்டும்? அப்படி உபாயத்தை நாம் இதுவரை ஏன் தேடவில்லை. அப்படித் தேடினோமானால் அதனால் என்ன பலன்? என்று இவைகளை நாம் கொஞ்சமேனும் கவனிக்கிறோமில்லை. ஒரு நாளில் 24-மணி ஸாவகாசத்தில் நித்யமாயுள்ள இந்தவிஷயத்துக்கு ஒரு 5-நிமிஷம் கூட நாம் செலவழிக்கிறதில்லை. இப்படி நாம் கவனியாததற்குக் காரணம் இப்படி ஆத்மா என்று ஒரு நித்யமான வஸ்து இருக்கிறது என்பது நமக்கு மனதில் படாமையே. நம்மில் பெரும்பான்மையோர் அதை வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மனதில் இது படவில்லை. இதைப் படும்படி செய்துவைக்க வேண்டியதுதான் ஒரு ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்யவேண்டிய கார்யம். இந்த விஷயங்களை அறிந்துகொண்டால் சிஷ்யனுக்கு நிரம்பவும் ஸௌகர்யமுண்டு. இப்படி அழிந்துபோகிற சரீர விஷயத்தைப்பற்றிக் கவனியாமல் நித்யமான ஆத்மவிஷயத்தைக் கவனிப்பதுதான் முக்ய கார்யம் என்பதில் யாராவது ஆக்ஷேபனை செய்யமுடியுமா? முடியாது. எப்படி ஓர் உபாத்தியாயர், படிக்காமல் விளையாடிக்கொண்டிருக்கிற ஒரு பையனை ஐயோ இப்படி விளையாடினால் பின்னிடு இவன் தாரித்திரியத்தால் கஷ்டப்படப்போகிறானே என்று நிரம்பவும் தபவால் தான் அழைத்துத் தன் பக்கலிலே வைத்துக்கொண்டு படிப்பைப் புகட்டி வைக்கிறாரோ; அதே மாதிரி ஒரு ஆசார்யன், தன் சிஷ்யனிடத்தில் பரமக்ருபையாலே இவனுடைய ஆத்மா அந்யாயமாகக் கெட்டுப்போகிறதே, எவ்வளவு காலமோ இம்மாதிரி வீணாக்கிவிட்டானே, ஐயோ ஜன்மஜராமரணாதிகளாலும் நரகானுபவத்தாலும் எவ்வளவு யாதனைப்படப்போகிறானோ என்று ஒரு மனுஷ்யனை வலுவிலே கூப்பிட்டு 'அப்பா நீ கெட்டுப்போகாதே நீ இப்படி எவ்வளவோ ஜன்மம் எடுத்தாய்விட்டது. எவ்வளவோ கஷ்டங்களை அனுப



வித்தாய்விட்டது. இன்னமும் கேவலம் சரீரவிஷயமாகக் கவனித்து ஆத்மாவைப் பரிகொடுத்துவிடாதே' என்று ஆத்மவிஷயத்தை உபதேசிக்க வேணும்.

ஆசார்யர்கள் ஈச்வரனுடைய அவதாரமென்று சொல்லப்படுகிறார்கள். ஸர்வேச்வரன் பரமக்ருபையாலே லோகத்தில் இப்படி ஸம்ஸாரசாகரத்தில் அழுந்தி மேலும்மேலும் கெட்டுப்போகிற இந்த ஆத்மாக்களை நித்ய ஸௌக்யத்தை அடைவிக்கவேணுமென்று முதலில் வேதங்களை வெளியிட்டான். அதை ஜனங்களுக்கு உபதேசித்து, அவர்களும் அதை அனுஷ்டித்துக் காட்டும்படி ருஷிகளை ஏற்படுத்தினான். அது கார்யகரமாகவில்லை. அப்பால் பரமதயாவானானபடியாலே இனி, தானே உலகத்தில் வந்து ஜனங்களைத் திருத்தி ஆத்மவிசாரத்தில் திருப்பி நல்ல வழிக்குக்கொண்டு வரவேணுமென்று திருவுள்ளம்பற்றி, லோகோத்தரமாகிய தன்னுடைய பரமபதமாகிய ஸ்ரீவைகுண்ட திவ்யநகரத்தை விட்டுவிட்டு நரகத்துக்குச் சமானமான மஹாபாபிகளான ஜனங்கள் வர்த்திக்கிறதான இந்த லோகத்தில் '[illegible]' என்று ராமன் க்ருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்தான். இப்படி அவதரித்தும் கூட எவ்வளவு காலம் லோகத்தில் மனுஷ்யனாக இருக்கமுடியும். எவ்வளவு ஜனங்களுடன்தான் நெருங்கி அணுகமுடியும். இப்படி இதிலும் தன் இஷ்டம் நிறைவேறவில்லையென்று திருவுள்ளம்பற்றி 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா ||' என்றும் 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாய் வந்து' என்றுஞ்சொல்லுகிறபடியே ஈச்வரன் தானே அநேக ஆசார்யனாக அவதரிக்கத் திருவுள்ளம் பற்றினான். இப்படி தன்னுடைய திவ்ய தேசத்தைவிட்டு இவ்வுலகில் வந்து ஆசார்யாவதாரம் செய்தது எதற்காக? ஊரூராகச்சென்று சிஷ்யன் சேர்ப்பதற்காக இல்லை. அல்லது சிஷ்யனிடத்தில் பணத்தைவாங்கிச் சேர்த்து வைப்பதற்காக இல்லை. அல்லது இந்த சிஷ்யனுக்குத் தானே ஆத்மவிசாரமேற்பட்டு நம்மிடத்தில்வந்து வலுவிலே அறிந்து கொள்ளட்டும் என்று இவைகளை உத்தேசித்து லோகத்தில் ஆசார்யாவதாரம் செய்ய இல்லை. அப்படியானால் ஈச்வரனிடத்தில் காருண்யமும்சொல்லமுடியாது. அவன் இவ்வுலகில் அவதரிக்கவும் வேண்டாம். ஆனால் எதற்காக இந்த லோகத்தில் ஆசார்யாவதாரம் செய்தார் ஸர்வேச்வரன் என்றால் '[illegible]' என்று ஜனங்களை ஸம்ஸாரத்திலிருந்து மீட்பதற்காகவே அவதாரம். ஓர் ஆற்றின் சமீபத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு பையன் தண்ணீரில் தவறி

விழுந்துவிட்டால் ஸமர்த்தனுகவும் காருணிகனுகவும் ஒருவன் சமீபத்திலிருந்தால் அந்தப் பையன் கேட்காமலே எப்படிபோய் அவனைக் கரைசேர்த்துவிடுவானே, அதேமாதிரி இதற்காகவே இவ்வுலகத்தில் ஆசார்யாவதாரம் செய்திருக்கிற ஸர்வேச்வரன், மனுஷ்யனை வலுவிலேபோய் ம்ருகவேஷம் பூண்டு ம்ருகத்தைப் பிடிக்கிறதுபோல, தானும் மனுஷ்ய வேஷத்தைத் தரித்துகொண்டு ஒவ்வொருவரையும் நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வருகிறுராம்.

இப்போது ஆசார்யனுக லோகத்தில் வழங்கிவருகிறவர்கள் ஈச்வராவதாரம்தானே? சேதனர்களை உஜ்ஜீவிக்கப்பண்ணவேணுமென்றுதான் இவர்கள் லோகத்தில் வந்திருக்கிறுர்களோ? என்றுல் மந்தபுத்தியான அடியேனுக்குச் சில சங்கதிதோன்றுகிறது. எந்த ஆசார்யன் அத்யந்த தயையுடன் ஒரு ஆத்மா நல்லகதி அடையவேண்டுமென்கிற ஒரே உள்ளத்துடன் மட்டும் அவனிடம் த்ரவ்யத்தையோ, அல்லது மரியாதையையோ அல்லது லோகத்தாரின் புகழையோ எதிர்பாராமல் ஒரு ஜீவன் நம்மிடம் வந்து கேட்டால் நல்ல விஷயத்தைச்சொல்லி அந்த ஜீவனை நல்ல ஸ்திதிக்கும் கொண்டுவருவோம் என்கிற எண்ணம் இல்லாமல் ஒரு ஜீவனைக் கண்டவுடனேயே அவன் ஏழையாக இருந்தாலும் பணக்காரனுகவிருந்தாலும் த்ருடகாத்திரனுக இருந்தாலும் வ்யாதிக்ரஸ்தனுக இருந்தாலும் உயர்ந்தகுலத்தில் ஜனித்தவனுக இருந்தாலும் தாழ்ந்த குலத்தில் ஜனித்தவனுக இருந்தாலும் அவன் ஒரு ஜீவன் என்கிற விஷயந்தவிர மற்ற எதையும் அவனிடம் எதிர்பாராமல் அவனைக்கண்ட மாத்திரத்திலேயே எந்த ஆசார்யன் அவனுக்கு நல்ல வார்த்தைகளைச்சொல்லி அவனை நல்ல வழியில் திருப்பி ஆத்ம ஸௌக்யத்தைச் செய்யவேணுமென்று மனப்பூர்வகமாக அவனிடம் கவலைப்பட்டு நடத்துகிறுனே, அவன்தான் ஆசார்யன். அவனே ஈச்வராவதாரம். ஈச்வரன் தானே பரமக்ருபையாலே சேதனுஜ்ஜீவனார்த்தமாகவே லோகத்தில் ஆசார்யனுக அவதரித்திருக்கிறதாகச் சொல்வது வாஸ்தவமாக இருந்தால் அந்த ஆசார்யனிடம் முக்யமாக இருக்கவேண்டியது தயை. ஒரு மனுஷ்யன் எப்படியாவது உஜ்ஜீவித்து நல்ல கதியைடையவேண்டுமென்கிறஅந்த ஆத்மவிஷயமானகவலையுடன்நாம் ஜனங்களை நல்ல ஸ்திதிக்கு கொண்டுவருவதற்காக லோகத்தில் வந்திருக்கிறுமென்று ஆசார்யன் நினைத்துப் பொருளுக்காவது வேறு எந்த சங்கதிக்காவது ஆசைப்படாதிருத்தல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

## கடிதம்.

நடந்த இரண்டுவருஷங்களுக்குமுன் சில திவ்யதேசங்களிலும் மற்றுஞ்சில இடங்களிலும் வைகாநஸர்கள் தப்த சக்ராங்கனம் சில நிர்பந்தத்தால் நூதனமாய்ச்செய்துகொண்



டது ஸகலருக்கும் தெரியலாம். இதுவரை வைகாநஸனர்களுக்கு ஸமாச்ரயணம் இல்லை என்பது லோகப்ரஸித்தம். புதிதாய்ச்செய்துகொண்டது. இதுவும் கலியின் ஓர் மகத்துவமேதான். நிற்க, வைகாநஸர்கள் ஒரு ஸூத்ரஸ்தர்கள். விகனஸமஹரிஷியே அவர்கள் ஸூத்திரகர்த்தா. இம்மஹரிஷி ‘ [illegible] ’ என்று மானஸோத்பவராய்ப் பகவதர்ச்சனை கைங்கர்யநிமித்தம் உண்டு பண்ணப்பட்டவர். இவர் அநேக க்ரந்தங்கள் செய்து இருக்கிறுர். அதில் தம்முடைய சிஷ்யர்களான பிருகு, அத்திரி, மரீசி, காச்யபர் இவர்களுக்கு லக்ஷணங்கள் சொல்லுமிடையேக் கர்ப்பசக்ராங்கனம் செய்துகொள்ளவேணுமென்றும் பாஹியதப்தம் கூடாதென்றும் தனக்கு அக்காலத்தில் பகவான் தப்த சக்ராங்கனம் செய்யவில்லை என்றும் ஷிலக்ஷணங்கள் பூராசொல்லுமிடையே (வைகானஸமமஸூதா) என்று கீழேமற்றோர்புறம் காண்க! மேலேசொன்ன பிரமாணத்தால் தனக்குப் பகவான் தாபரூபமாய் ஸமாச்ரயணம் செய்யவில்லை என்றும் என் மானஸிகமாக உன்னை என் ஆராதனநிமித்தம் உண்டு பண்ணப்பட்டதால், உன் சிஷ்யர்களான மஹரிஷிகளுக்குத் தப்தசக்ராங்கனம் பண்ணக் கூடாது; கர்ப்பசக்ராங்கனமே செய்துகொள்ளவேணுமென்றும், அதவா செய்துகொண்டால் தோஷமேற்படுமென்றும் சொல்லி இருக்கிறுர். விகனஸர் சிஷ்யர்களான மேலே கண்ட நான்கு சிஷ்யர்களும் அநேகம் கிரந்தங்கள்செய்து இருக்கிறுர்கள். இவர்கள்செய்துள்ள கிரந்தங்களிலும் சக்ராங்கனம் செய்துகொள்ளவேணுமென்கிற பிரஸக்தியே கிடையாது. வைகானஸர்களின் அநுஷ்டானமும் சாஸ்திரமும் பரிசயமில்லாத சிலர் வைகானஸர்களுக்கும் ஸமாச்ராயணம் உண்டென்று பறைசாற்றுவதே அவர்களின் காரியம் - நிமந்த்ரணஸ்வாமியை நெய் விலை கேட்பதுபோல் மேலே கண்டவர்களின் செய்கை. அதுநிற்க விகனஸர் விஷ்ணுபலி ஸம்ஸ்காரமென்று ஒருகிரியை விதித்து இருக்கிறுர். வைகானஸர்களுக்குள்ள சாரீரஸம்ஸ்காரங்கள் 8-ல் விஷ்ணுபலி ஸம்ஸ்காரம் ஒன்று. மற்ற ஸூத்திரஸ்தர்களைவிட இரண்டு ஸம்ஸ்காரங்கள் வைகானஸர்களுக்கு அதிகம். இதனுலேயே இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாஸம் தெரியவரும். ‘ [illegible] ’ என்று பகவான் கர்ப்பம் 8-வது மாஸத்தில் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்குத் தானே சங்கசக்ரங்களைத் தரிக்கும்படியாய்ச்சொல்லி இருக்கிறுர். தவிர மரீசி ஆனந்த ஸம்ஹிதை 19-வது அத்தியாயத்தில்

‘ [illegible] ’

என்று இப்படி அநேகம் கிரந்தங்கள் வைகாநஸர்களுக்குத்தப்த சக்ராங்கனம்கூடாதென்று உத்கோஷிக்கின்றன. ‘ [illegible] ’ என்று ஆரம்பித்துள்ள கிரந்தத்திலும் வைகாநஸர்கள் மூலமாய்ப் பாசகபரிசாரகர்கள் தப்தசக்ராங்கனம் செய்துகொண்டாலொழிய ஆலய கைங்கர்யத்திற்கு அர்ஹர்கள் ஆகமாட்டார்க

ளென்று விதித்திருக்கிறார். பிருகு, அத்திரி, மரீசி, காச்யபர், ஸ்ரீநிவாஸதீக்ஷிதீயம், ஸ்மிருதிமீமாம்ஸை, நிர்ணயஸிந்து, ஹேமாத்ரி, அர்ச்சனாநவநீதம், வைகானஸமஹிம மஞ்சரி, வைகானஸ ஆகமம், ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ஸஜ்ஜனஸம்பவம் இதுபோன்ற அநேகம் கிரந்தங்கள் வைகானஸர்களுக்குத் தப்தசக்ராங்கனம்செய்து கொள்ளக்கூடாதென்று விதிக்கின்றன. ஸ்ரீபாஞ்சராத்திரத்தில் தீக்ஷை விதித்து இருக்கிறார். அந்த ஸூத்ரக்காரர்கள் அதன்படி அநுஷ்டிக்கிறார்கள். அதனாலேயே வைகானஸத்திலும் தீக்ஷைபண்ணிக்கொள்ளவேணுமென்று சொல்லிவிடலாமா? ஏகாதசி ச்ராத்தம் தென்கலைஸ்வாமிகள் அநுஷ்டிப்பதில்லை. நாம் அவர்களை ஏகாதசி ச்ராத்தம் பண்ணுங்கோளென்று சொல்லிவிடலாமா? சக்ராங்கனம் செய்துகொள்ளக்கூடாதென்றும் ஹேமாத்ரி முதலிய கிரந்தங்கள் கண்டிக்கிறதென்றும் அங்கங்களில் தேவதைகள் வஸிப்பதால் தாபம்பண்ணினால் தேவதைகள் நசிக்கிறார்களென்றும் அதனால் சரீரத்துக்குத் தோஷமேற்படுகிறது; ஆதலால் ஸமாச்ராயணம் செய்துகொள்ளக்கூடாதென்று நாம் சொல்லிவிடலாமா? தன்னுடைய மதாசாரத்தையும் சாஸ்திரத்தையும் விடுவார்களா! அதுபோல் பிறருடைய மதாசாரத்தையும் சாஸ்திரத்தையும் விட்டு விடுவார்களாவென்று ஊஹம் வேண்டாமா? ‘யஸ்ஸ்வஶாகாம் பரித்யஜ்ய பரஶாகானுவர்ததே। ஶாகாரண்ட: ஸ விஜ்ஞேய: ஸர்வகர்மபஹிஷ்க்ருத:॥’ என்றும் பகவத்கீதை அத்யாயம் 3-ச்லோகம் 35. ‘ஶ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத்। ஸ்வதர்மே நிதனம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ:॥’ என்றும். (குணத்தோடு கூடிய அன்னியருடைய தர்மத்தை ஒருவன் அநுஷ்டிப்பதைப் பார்க்கிலும் குணமில்லாத தன்னுடைய சொந்த தர்மத்தை அநுஷ்டிப்பதில் மரணமடைந்தபோதிலும் அதேசிலாக்கியம்.) பிறருடைய தர்மத்தை நாம் அநுஷ்டிப்பது இஹத்திலும் பரத்திலும் நமக்கு இடையூறுகளையேவிளைவிக்கக்கூடியது என்பதுபோல் பாஷாணத்தில்ஜநித்தபுழுவுக்குஅப்பாஷணம்விஷமில்லைஎன்பதுபோல்பிறப்பால்ஏற்பட்டிருக்கும்தர்மத்தை அநுஷ்டிப்பதில் பாபமில்லை. தெரிந்தமஹான்களுக்குஇனி நான்சொல்லவேண்டியதில்லை. மேல்கண்ட கிரந்தங்கள் போல் இன்னும் அநேகம்இருக்கின்றன. ஆகையால் வைகானஸர்களுக்குத்தப்த சக்ராங்கனம் ஸர்வப்ரகாரத்தாலும் கூடாது. அதவா அஜ்ஞானத்தாலாவது பிறருடைய நிர்ப்பந்தத்தாலாவது மற்றும் எந்தக்காரணத்தாலாவது தாபமாய்ப் பண்ணிக்கொண்டால்,

‘வைகானஸ குலே ஜாதா அஜ்ஞானாத் தப்ததாரிண:।
ப்ராயஶ்சித்தம் மஹாஶாந்திம் க்ருத்வாஹுதிம் ஶாஸ்த்ரத:॥
அஜ்ஞானாத்யதி வா மோஹாத்யதி சக்ராங்கிதோ யதி॥
வைகானஸோ பவேத் ஸோऽயம் ஸர்வகர்மஸு ஸம்மத:॥’

என்று இருப்பதால்மஹாசாந்தி பிராயச்சித்தம் செய்தாலொழிய ஆலயார்ச்சனைக்கும் மற்றெந்தக் கர்மாவுக்கும் சுத்தனாகமாட்டான். பிரதிஷ்டாதி உத்ஸவங்களுக்கும் அன்வேஷிக்க வைகானஸத்தில் இடம் தராது என்பதை மஹநீயர் அறிந்திருந்தாலும் அடியேனுக்குத்தெரிந்தமட்டில்எழுதிய இச்சிறுவிஷயத்தில் அநேகம் தவறுதல் இருக்கலாம், இருந்தாலும்தீர்க்கதர்சிகளான மஹான்கள் என்னுடைய அபராதத்தை ஸஹித்தருளவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

கூறுளநெஞ்சுகளால் சிலர் குற்றமெண்ணி நம்பெரியோர்கள் முறையை இகழ்ந்திடினும் அவை தேனுளபாதமலர் திருமாலுக்குத் தித்திக்குமென்பது திண்ணம்.

ஸ்ரீமத் பரமபாகவதாசாரியகிருபாபியூஷவர்தித
வைகானஸ ஆகமபண்டித ஸ்ரீமான் ஆயலூர் சேஷபட்டாசாரிய பிரதம சிஷ்யனான
தேவயஜனம் வைகானஸம் E. K. அனந்தாசார்ய தாஸன்,
எழும்பூர்.

# போக்த்ராபத்த்யதிகரண பாடபேத விமர்சம்.

[ஸ்ரீ. உப. வே. ந. நீலமேகாசார்யர்]

(முன்தொடர்ச்சி)

ஸம்பந்தாதிகரணத்தில் ‘சக்ஷுராதிவத்’ என்கிற ச்லோகத்தில் ‘ஈஶயதி ச’ என்கிறஸூத்ரார்த்த ஸங்க்ரஹமான ‘ப்ராணவதிதி ஜைமினி:’ என்கிற வண்டம் அந்யதாவ்யாக்யாதமாயிருக்கிறது. அக்ஷரத்யதிகரணத்தில் ‘யஸ்ய உபே பவத ஓதந:’ என்கிற ச்லோகத்தில் ஆநந்தாதிக்ரியாபதம் அந்யதாவ்யாக்யாதம். ஆகையால் ப்ரக்ருதத்திலும் ‘கோஶபாஜாம்’ என்பதின் வ்யாக்யானம் அபிப்ராயந்தர மூலமாகவிருக்கலாமென்றும், இந்த சிந்தாமணி ஸ்ரீஸூக்தியிலேயே சிலவிடங்களில்போலே இவ்விடத்திலும் சில பங்க்திகள் த்ருடிதங்களாகவிருக்கலாமென்றும் சொல்லுவார்கள். அடியேனுக்கு இவ்விரண்டு ப்ரகாரமும் உசிதமாகத்தோற்றவில்லை. மூலத்துக்கு அநுகுணமாகவே அபிப்ராயாந்தரபரமன்றிக்கே சிந்தாமணி க்ரந்தத்தை நயம்பண்ணுவதே உசிதம். ப்ரக்ருதத்தில் ‘ப்ரஹ்மருத்ராதி ப்ரவாஹபர்யந்தாநாம்’ என்கிறவிடத்தில் ப்ரஹ்மருத்ராதி ப்ரவாஹச்சேதித்வந்த்வஸமாஸம். முக்யவ்ருத்தமான ப்ரஹ்மசப்தத்தாலே ஆநந்தமயகோசமான ப்ரஹ்மமும், ருத்ராதி ப்ரவாஹ சப்தத்தாலே விஜ்ஞானமயகோசமான ஸகல ஜீவர்களும் சொல்லப்படுகிறார்கள். வாசிகாநாமென்னுமல் பாராணுமென்பதினால் இவர்கள்ருத்ராதித்வேந அர்த்தங்களன்றென்றும் தாத்பர்யார்த்தங்கள் என்றும் தோற்றுகிறது. நிரதிஶயாநந்தஸ்ய, தத்ப்ரதிகோடிஸஞ்சித நிரதிஶயது:கஸ்ய ச ப்ரஸக்தஶாலிகளான ஜீவேச்வரர்களில் தத்பரங்களான என்று இதனர்த்தம். ஆநந்தோ ப்ரஹ்ம, ஆநந்தம் ப்ரஹ்மண:, என்கிற ச்ருதியை அநுஸரித்து நிரதிசயாநந்தவத்வம் தோற்றுகைக்காக ப்ரஹ்மசப்த ப்ரயோகமும் ‘ஸோரோதீத்’ என்கிற வாக்யத்தை அநுஸரித்து து:கவத்த்வமும் தோற்றுகைக்காக ருத்ரசப்த ப்ரயோகமும் பண்ணினது. இவர்களுக்கு ஸ்தாநப்ரம்சரூபமான து:கமுமுண்டென்று ஸூசிப்பிக்கைக்காக ப்ரவாஹபதம். ஆகையால் சிந்தாமணி க்ரந்த கர்த்தாவுக்கும், கோசபாஜமென்பதற்கு விஜ்ஞானமயகோஶ, ஆநந்தமயகோஶ ரூடிவாசகாநாமென்கிற அர்த்தமே திருவுள்ளம் என்னக்குறையில்லை. மேல் சதுர்முகாதய: என்கிறவிடத்திற்போலே இவ்விடத்தில் சதுர்முக

சப்தமில்லாமையாலும் அவ்விடத்தில் ப்ரஹ்மசப்த ப்ரயோகமில்லாமையாலும், ஓரிடத்தில் ஓரர்த்தத்தில் இரண்டுவிதமான பதங்களை ப்ரயோகிப்பது அவ்வளவு ஸ்வரஸமில்லாமையாலும் இங்கு ப்ரஹ்மபதத்துக்கு முக்ய வ்ருத்தியையே கொள்ளுகை உசிதமாகையால் நபும்ஸகலிங்கமான ப்ரஹ்மசப்தத்தையே கொள்ளவேண்டும். உபக்ரமத்தை யநுஸரித்து ருத்ராத்யா: என்னாதே ப்ரஹ்மருத்ராத்யா: என்று ப்ரயோகித்தால் பஞ்சமுகத்வஹானி தோற்றுகையால் ப்ரஹ்ம ருத்ராத்ய: ஸூசிதமாகிறது. இப்படியானபின்பு மூலத்துக்கும் வ்யாக்யானத்திற்கும் சேர்த்திக்கு ஒருவிதமான விரோதமுமில்லை. இப்பக்ஷத்தில், 'கோஶஹாஜா' என்கிற பதப்ரயோகத்துக்கு ப்ரயோஜன விஷயங்களாவன:— (1) இப்பூர்வபக்ஷம் 'நநு ஜீவஶ்ச பஞ்சாத்மா வாச:' என்கிற ஸூத்ரார்த்தாக்ஷேப த்வாரா ஆநந்தமயாதிகரண ஸித்தாந்தார்த்தத்தின்பேரில் வந்த பூர்வபக்ஷமென்று ஸூசிப்பிக்கை. (2) அநந்யதாஸித்த ஜீவேச்வரபேதத்தைச் சொல்லுகிற பஞ்சகோச ப்ரதிபாதகமான ச்ருதிவிருத்தம் பூர்வபக்ஷம் என்று ஸூசிப்பிக்கை. (3) பூர்வபக்ஷ ஸாதகமாக எவனுக்கு தேஹமோ, அவனுக்கு போக: வம்' என்கிற ந்யாயம் ப்ரமாணவிருத்தமென்று ஸூசிப்பிக்கை. (4) அபலாபமாவது த்ருட ப்ரமாண ஸித்தார்த்தாப்யதாகரணமாகையால் பூர்வபக்ஷத்திற்கு அபலாபரூபத்வம் உபபந்நமாகைக்காக ச்ருதிரூப ப்ரமாணத்திற்கு த்ருடதரத்வ ஸூசநம். (5) ஸித்தாந்திக்கு அபிமதமான ந்யாயத்துக்கு ப்ரமாணாநுகுண்யம். (6) பூர்வபக்ஷ ஸாதகயுக்திக்கு த்ருடப்ரமாண விரோதஸூசநம். (7) ஸித்தாந்தார்த்தத்திற்கு த்ருடதர ப்ரமாண ஸித்தத்வஸூசநம் என்றிவை முதலியன. இப்பக்ஷத்தில், ஆகாங்க்ஷா, ஆகாங்க்ஷிதாகாங்க்ஷா, அப்ரஸித்த, வ்யாவ்ருத்தி விரோதம், அநபேக்ஷிதாபிதாநம், அபேக்ஷிதாநபிதாநம், ஒருகோசங்களிலும் காணப்படாத பாடபரிகல்பநம் முதலிய தோஷங்கள் கிடையா. ருத்ரசப்தத்தோடுகூடின ப்ரஹ்மசப்தத்துக்கு அஸ்வரஸமாக பரப்ரஹ்மத்தை அர்த்தமாகக் கொள்வதொன்றேயுள்ளது. இதுவும் 'ஸந்நிதாநஹி விசேஷ:' என்கிற ந்யாயத்தாலே வித்வான்களுக்கு ஸஹ்யமாம். சதுர்முக ருத்ராதிகளைச் சொல்லுமிடத்தில் முதலில் சதுர்முகனைச்சொல்லிப் பிறகு ருத்ராதிகளைச்சொல்வது உசிதமாயிருக்க இங்கு முதலில் ருத்ரனைச்சொல்லி ஆதிபதத்தாலே சதுர்முகனை க்ரஹிப்பது உசிதமோவெனில் 'சிவற்கும் திசைமுகற்கும்' என்றும், 'களிர்மதிச்சடையன் நான்முகக்கடவுள்' என்றும், 'நீலார்கண்டத்தம்மானும், நிறைநான்முகனும்' என்றிப்படியும் பலவிடங்களில் ப்ரயோகமுண்டாகையாலும், இதை விவரிக்



கிற பிள்ளான் ஸ்ரீஸூக்தியில், பலவிடங்களில் அர்த்த க்ரமத்தையநுஸரித்துப் பாடக்ரமத்தையநாதரித்து வ்யாக்யானம் பண்ணச்செய்தேயும், உக்தவிடங்களில் மூலத்தையநுஸரித்தே 'ஶிவஶ்ச ப்ரஹ்மாதிகள்' என்றிவ்விதமாக வ்யாக்யானம் செய்தருளுகையாலும் 'ஹரவிரிஞ்ச ஜீவ:' என்று ப்ரயோகம் காண்கையாலும், இங்கும் ருத்ரர்களைச்சொல்லிப் பிறகு சதுர்முகனைச்சொல்வது அநுசிதமன்று. ச்ருதிநாமென்பதற்கு ஜீவேசஸீமாமென்பதோடு அந்வயபக்ஷத்தில் 'கோஶஹாஜா, ப்ரஹ்மருத்ராதி ரூபாஶ்வபாணா:' இத்யாதி சிந்தாமணிக்கு அந்வயம் ஸாதிப்பதில் தாத்பர்யமில்லையென்று கொள்ளவேண்டும். ஷஷ்டிக்கு ஆநுகுண்யத்தை அர்த்தமாகக்கொண்டு 'ஸ்ரோதஸ்ய ஸ்ருதி நீதயா' என்பதோடு அந்வயம் சொல்லும்பக்ஷத்தில் சிந்தாமணி க்ரந்தம் அந்வயபரமாயேயிருக்கலாம். சிந்தாமணியில் ருத்ராதி என்றும், சதுர்முகாதி என்றும் இரண்டுவிதமாக ப்ரயோகித்தது, ஒரு கல்பத்தில் அவர்களுக்கு பித்ருபுத்ரபாவமிருந்தபோதிலும் கல்பாந்தரத்தில் ப்ராத்ருபாவமுமுண்டாகையாலே, 'ஸாக்ஷேத்ர தநயம் ஸ்ரோதஸ்ய ஸ்ருதி' என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே, ருத்ர ரூபிஷு, விதயவாத வதிவதாதிகள் க்ரஹிக்கப்படுகிறார்கள். இந்த விடங்களில் சரீரசம்பந்தாதிகள் துல்யமாயிருந்தாலும், நியந்த்ருத்வ நியாம்யத்வாதிகள் வ்யவஸ்திதங்களென்னுமிடம் லோக ஸித்தம்.

ஒரு கோசங்களிலும் காணப்படாததான 'கேஶ' என்கிற பாடத்தைக் கல்பித்து, அதற்கு பஹுவிதபரிணாமங்களை அங்கீகரிப்பதிற்காட்டில் பல வித்வான்களால் பல ஸ்ரீகோசங்களைப்பார்த்துச் சோதிக்கப்பட்டுப் பாடபேதமுள்ளவிடத்தில் பாடபேதத்தோடுகூட அச்சிடப்பட்ட ஸ்ரீகோசத்தில் இவ்விடத்தில் பாடபேதாகிதமான 'கோஶ' என்கிற பாடத்துக்கே 'கேஶ,' 'க்லேஶ' இது முதலான பரிணாமங்களை ஒப்புக்கொள்வதே உசிதம். 'கேஶ' என்னும் பாடத்தில் கல்பனை ப்ரயோக: ஹேயஶ்ச ஷாதீதி, வாக்யவைகல்யம் தாநவபோதாநபிதாநா, அஸம்பந்தம் முதலிய தோஷங்களுண்டு. பாடாந்தரங்கள் எல்லாவற்றிலும் அநுபயுக்தார்த்த கதனமும் அநந்வயமுமுண்டு.

ஆகையால் 'கோஶமாஜா' மென்கிற பாடமே ஸாதுவென்று அடியேனுக்குத்தோன்றுகிறது. இந்த விஷயத்தை வித்வான்கள் ஸஹ்ருதயமாகப் பராமர்சித்து இதிலுள்ள குணதோஷங்களை அடுத்த பத்திரிகையில் நியமிக்கவேணுமாய் ஸவிநயமாக ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:.

# ஒரு மஹானுடைய வார்த்தை.

ஸ்ரீமத் ஆண்டவன் என்னும் ஸ்ரீநிவாஸமஹாதேசிகனைப்பற்றி அந்த ஸ்வாமியின் திருவடியும் அந்த ஸ்வாமியின் ஸம்பிரதாயத்தைப் பரவச் செய்பவருமான ஒரு மஹானுடைய வார்த்தை:—

மதமென்றால் நினைவு என்று அர்த்தம். வேதமென்பது நித்யமென்று சொல்லுகிறார்கள். லோகத்தில் பழமொழி என்றும் சொல்லுகிறார்கள். பழசு என்பதற்கு நித்யமென்றுதான் அர்த்தம். அதை ஒரு காலத்தில் உண்டானதென்று சொல்லமுடியாது. இது எல்லா பாஷைகளிலுமிருக்கிறது. அநுபவத்திற்கும் ஒத்திருக்கிறது. நாம் சம்ஸ்க்ருதபாஷையில் வேதமென்று சொல்லுகிறோம். இதை அநேகம் பேர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஒப்புக்கொண்டவர்களும் அநேகவிதமாக அர்த்தம் சொல்லுகிறார்கள். ஒன்றுக்கொன்று ஒத்துக்கொள்ளவில்லை. அதனுடைய உண்மை எதுவோ தெரியவில்லை.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்றுகுணங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. அதில் ஸத்வம் இதரகுணங்களோடு எவ்வளவுக்கெவ்வளவு சேரவில்லையோ அவ்வளவுக்கவ்வளவு உண்மையான அறிவை உண்டாக்கும். பிராமணர்களுக்குள்ளே பிரஸித்தமாய் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் த்வைதம் என்று மூன்று பிரிவு, அதாவது (ஸ்மார்த்தர்கள், வைஷ்ணவர்கள், மாத்வர்கள்) என்று இருக்கின்றன. வைஷ்ணவர்களுக்குள் வடகலை, தென்கலை என்றும் வடகலைக்குள் மடம் முனித்ரயம், என்றும் இவற்றுக்குள்ளும் கொஞ்சம் பேதமிருக்கிறது. பார்க்கப்போனால் ஒவ்வொருவருக்குமே இப்போது பேதமிருக்கிறது. நம்முடைய மதத்தில் ஜீவன் என்று அழிவில்லாததாய் ஒறுவஸ்து இருக்கிறது.

அதற்கு யஜமானனாய் எல்லாவித உறவுள்ளதாய் ஸ்ரீமந்நாராயணன் என்று தெய்வம்ஒன்று இருக்கிறது. அதற்கு அழிவில்லாத இடம் ஒன்று இருக்கிறது. அந்த இடத்திற்கு இந்த ஜீவன்கள் போய்ச்சேர்ந்தால் நிரம்பச் சுகமாய் இருக்கும். அந்த இடத்திற்கு அந்தத் தெய்வம்தான் கூப்பிட்டுக் கொண்டுபோகவேணும். (நாம்) இந்த ஜீவன்கள் அந்தத் தெய்வத்துக்கு இஷ்



டமான வேலையைச் செய்யாதபடியால் இவர்களிடத்தில் அதற்கு மனஸ்தாபமாகவிருக்கிறது. அதை நீக்குவதற்குச் சில ஏற்பாடுகளோடு அந்தத் தெய்வத்தை நினைத்தாலும்(அதாவது த்யானம்செய்தாலும்)அது முடியாமல் போனால் அந்தத்தெய்வத்தைக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டாலும் அந்த தெய்வத்திற்கு சந்தோஷமுண்டாய் ஜீவன்களை தன்னிடத்திற்கு அழைத்துக் கொள்ளும். தெய்வத்தைச் கெஞ்சுவதற்குச் சரணாகதி என்றுபெயர். அதில் தானே கெஞ்சுகிறது என்று ஒன்று. அதில் நிரம்பத்தெரிந்தவனென்றும் கொஞ்சம் குறைவு உள்ளவனென்றும் இருவகை தன்னால் கெஞ்சமுடியாமல்போனால் அந்த வேலை தெரிந்த வேறொருவர் தனக்காகக் கெஞ்சலாம் என்றும் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த மதம் அதிகப் பெரியோர்களாலே கண்டுபிடிக்கப்பட்டு நாளது வரையில் ஏதோ சுமாராய் நடந்துகொண்டுவருகிறது. இப்போது கலியுகத்தின் அதிகக் கொடுமையாலே அதிகக் கெடுதியிருந்தாலும் ஏதோநடக்கிறது.

முக்யமாய் நம் மதபிரவர்த்தகர்களுக்குக் கோபம் கொஞ்சமும் இருக்கக்கூடாது. எல்லாவிஷயத்திலும் நாம் அதிகத் தணிந்தவன் என்கிற நினைவு, தயை, பொறுமை, ஒழிவு, நாம் என்னமாயிருக்கிறோம் என்கிற நம்மைப்பற்றின விசாரம் இது முதலான குணங்கள் இப்போது இருப்பவர்களுக்கு மிகவும் ஸொல்பமாக இருக்கின்றன. ஒரு புல்லில்கூடச் சேரத்தகாதவனாய் அதிக அல்பனான நான் இதைச்சொல்வது எல்லையில்லாத பிசகு. எல்லையில்லாத தயவுபண்ணி மன்னிக்கவேண்டும். கீழ்ச்சொன்ன குணமுள்ளவர்களான பெரியோர்களுடன் நிரம்பப்பழக்கப்பட்டால் இந்தக் குணங்கள் வரலாம். பின்வரும் வியாஸத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீமதாண்டவன் என்பவர் அதிகப்பெரியவராலே அதிகக் கடுமையாக சிக்ஷிக்கப்பட்டுத்தேறினவர். கீழ்ச்சொன்ன குணமுள்ளவர்களுக்குள் கூடியவரையில் ஸர்வமதஸ்தர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகச் சிறந்தவர். அவராலே நடத்தப்பட்ட ஜனங்களை பழக்குகிற மாதிரியில் ஏதோ சிலபாகம் அவருடைய அனுக்ரஹத்தினால் இப்பவும் கொஞ்சம் நடந்துவருகிறது...... ...............என்று.

## கடிதம்.

ஸ்ரீ. உப. வே. வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,—

நான் புஷ்யசுத்த ஏகாதசியில் ஸ்ரீரங்கத்தில் கீழச்சேரி ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸாசாரியருடன் பேசும்போது ஸ்ரீமதாண்டவனுடைய மகிமையைத் தங்கள் வேதாந்த தீபிகையில் பிரசுரம் செய்வதற்கு எழுதியனுப்புவதாகச் சொன்னதின்பேரில் இவ்விஷயத்தையும் பிரசுரிக்கும்படி விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

186759

நான் மூன்று வருஷத்திற்குமுன் மைசூரிலாகா சிக்காரிபுரம் தாலூகா கல்மனே கிராமத்தில் காம்பு செய்து அஞ்சனூர் கிராமத்தின் பக்கத்தில் ஒரு பெரிய ஏரி கட்டவேண்டுமென்று ஸர்க்காருடைய உத்தரவின்பேரில் அங்கே பெரிய காட்டில் ஸர்வே செய்யும்போது மூன்று பெரிய யானைகள் வந்து என்னையும் என் வேலைக்காரர்களையும் சுற்றி வளைத்துக்கொள்ள, அப்போது நான் ஸ்ரீரங்கம் ஆண்டவன் என்னும் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸமஹாதேசிகனுடைய திருநாமத்தை மனதில் அனுஸந்தித்து அவர் தனியனை உச்சத்தொனியாலே ஆண்டவனே என்று கூப்பிட்டுக்கொண்டேன். பக்கத்திலிருப்பவர்களும் நான் சொல்லியபடியே செய்தார்கள். இந்தத் தொனியைக்கேட்டு அந்தயானைகள் துதிக்கையைத்தூக்கி உரக்கச்சப்தம்போட்டு அதித்துவிட்டுப் போய்விட்டன. பின்பு ஆண்டவன் பிரபாவத்தை அதிகமாகக்கொண்டாடி எங்கள் முன்னோர்கள் ஆண்டவன் மகிமையைச்சொல்லக்கேட்டதை நேரில்கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

இப்படிக்கு
**கெ. அநந்தராம அய்யங்கார்.**
**Retired Sub-Divisional Officer.**
மைசூர்.

ஸ்ரீ:

# ஸ்ரீமதாண்டவன், ஸ்ரீரங்கம்.

[ஸ்ரீ. உப. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்]

ஸ்ரீமத்ஆண்டவன் என்று உலகத்தில் பிரஸித்திபெற்ற ஸ்ரீநிவாஸமகாதேசிகன் கலியுகாதி 4902-3 ரௌத்திரிஹு மாசி ஸ்ரீ துவாதசி புஷ்ய நக்ஷத்ரத்தில் ஸ்ரீகாஞ்சியில் உலகத்தவருடைய சொல்வதற்கரிய பெரிய பாக்கியத்தால் திருத்துழாய் பரிமளத்துடன் முளைக்குமாபோல் எல்லா திருக்கல்யாண குணங்களோடும் திருவவதாரம் செய்தருளினர். ‘[illegible]’ என்கிறபடியே ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனைப்போல் 20-வது திருநக்ஷத்திரத்திற்குள்ளாகவே சகல வித்யாஸ்தானங்களையும் அப்யஸித்து நிகரில்லாத ஆசார அனுஷ்டானங்களை உடையவரானர். இந்த மஹான், ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடைய மற்றொரு அவதாரமாகிய நிக்ஷேபசிந்தாமணி உத்தரஸாரஸ்வாதினி முதலான ஸம்பிரதாய க்ரந்தங்களை அருளிச்செய்த திருக்குடந்தை தேசிகன் என்கிற ஸ்ரீமத் கோபாலார்ய மஹாதேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்த ஞான வைராக்ய அனுஷ்டான நிதிகளான முனிவர்கள் மூவரில் ஒருவராயும், ஸ்ரீமந் நாதமுனி ஸ்ரீமத் யாமுனமுனி (ஆளவந்தார்) ஸ்ரீமத் ராமாநுஜமுனி (பாஷ்யகாரர்) இவர்களான மும்முனிவர்களுடைய ஸித்தாந்தத்தை ப்ரவசனம் செய்துகொண்டு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த



ஸ்ரீரங்கம் ஸ்வாமியென்னும் ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் திருவடிகளில் பரஸமர்ப்பணம் (சரணாகதி) செய்துகொண்டு, அதன்பின்பு ஸத்தியம், ஞானம், பொறுமை முதலான நற்குணங்கள் வாய்ந்து ஈயுண்ணி திருவம்சத்தில் அவதரித்துச் சிறப்பாக வளர்ந்தருளி ஸ்ரீரங்கம் ஸ்வாமி சரமதசையில் ‘[illegible]’ என்கிறபடியே அவரால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டு அவருடைய தேஜஸ்ஸை முற்றிலும் பெற்றுக்கொண்டும், அந்த ஸ்வாமியினிடமிருந்தே ஸந்யாஸ ஆச்ரமத்தையும் பெற்ற பெரியஆண்டவன் என்கிற ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகன் ஸந்நிதியில் ஸம்பிரதாய க்ரந்தங்களையும் காலக்ஷேபம் செய்தருளினர். ஜ்ஞானாநுஷ்டான வைராக்யமுள்ள இம்மஹான் 32-வது திருநக்ஷத்ரத்தில் ஈயுண்ணி ஸ்வாமி என்னும் பெரியாண்டவனிடத்தில் ஸந்நியாஸத்தையும் பெற்று ஸ்ரீனிவாஸ மகாதேசிகன் என்ற திருநாமத்துடன் விளங்கினர்.

பின்பு வெகுகாலம்வரையில் பரமைகாந்திகள் திருமாளிகைகளுக்குச் சென்று மாதுகரம் (பிக்ஷை) வாங்கிக்கொண்டு, ‘[illegible]’ என்று அபியுக்தர் பாசுரப்படி சுத்த தீர்த்தத்தினால் பிக்ஷான்னத்தைச் சோதித்துத் திருத்துழாயுடன் சரீரதாரண மாத்திரத்திற்குரியவளவு அமுது செய்து ஏகாந்தமான ஸ்தலங்களில் எழுந்தருளியிருந்தார். இப்படி ஆத்மதாரணத்திற்கு வேண்டியதைமாத்திரம் ஸ்வீகரித்துக்கொண்டு வந்ததால் திருமேனி வற்றிப்போய் மிகவும்மெலிந்திருந்தபடியால் இந்த ஸ்வாமியை வற்றல் ஸ்வாமி என்று ஸாமான்ய ஜனங்கள் சொல்லத்தொடங்கினர்கள்.

இவ்வாறு முப்பது சாதுர்மாஸ்யங்கள் (வருஷங்கள்) சென்ற பின்பு ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யங்களைக்கண்டு ‘[illegible]’ என்னுமாப்போலே குணத்தில் ஈடுபட்டு அநேக ஞானிகள் (பண்டிதர்கள்) இந்தஸ்வாமியின் திருவடிகளை ஆச்ரயித்தார்கள்; அவர்களில் ஸ்ரீ வேளியநல்லூரில் அவதரித்த ஸ்ரீ. உப. வே. சின்னண்டவன் என்னும் ஸ்ரீமத் பாதுகாஸேவக ராமாநுஜமஹாதேசிக ஸ்வாமிக்குப் பூர்வாச்ரமத்தில் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அனுக்ரஹித்து, சரணாகதியையும் செய்தருளி, பின்பு ஸந்யாஸ ஆச்ரமத்தையும் ப்ரஸாதித்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்தருளும்படி நியமித்தருளினர். மற்றும் சில வைராக்யநிஷ்டர்கள் இந்த ஸ்வாமியினிடமிருந்து துரீயாச்ரமம் (ஸந்நியாஸம்) பெற்றார்கள். இந்த ஸ்வாமியின் திருவடிகளில் ஸ்ரீரங்கம் ஸ்வச்சந்தம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யஸ்வாமி சகல சம்ப்ரதாய க்ரந்தங்களை

யும் கேட்டுத்தெரிந்து அதன் பலமாகக் கரைபுரண்ட ஆசார்யபக்தியை அடைந்து 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று சக்ரவர்த்தித் திருமகனிடம் இளையபெருமாளைப்போல ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸ்ரீமதாண்டவனுக்கு எல்லாப்பணிகளையும் செய்து ஸ்ரீபாஷ்யகாரருக்கு ப்ரணதார்த்திஹராசார்யரென்னும் மடைப்பள்ளி ஆசானைப்போல் (மாதுகர) பிக்ஷாகைங்கரியமும் வெகுகாலம் செய்தருளினர். ஸ்ரீமதாண்டவனிடம் நான்கு திசைகளிலுமிருந்து அநேகம் சாஸ்திரங்களைப் பயின்ற மகாவித்வான்களும் 'அபிஜாத' உயர்ந்த குலத்தவர்களுமான மகாவித்வான்கள் வெகு திருநாமங்களும் ஆச்ரயித்தார்கள். இவர்களுக்கு ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தங்களையும் திருநெடுந்தாண்டகம் என்றொரு சாஸ்திரம் வருமென்ற ஸ்ரீபராசரபட்டரைப்போல் 'ஸாரஸாரஸாரஸ்வாதநம்' என்னும் நூல்களில் சிறந்த பகவத்விஷயத்தையும் பட்டுப்போன மரங்களும் தளிர்க்கும்படி உவந்த திருவுள்ளத்தோடு கேட்பார்கள் மனமுருகிப் பரவசமாகும்படி ஸாதித்துக்கொண்டு திவ்ய தேசம் அனைத்தும் மங்களாசாஸனம் செய்தருளி, இதர ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஆண்டவன் என்று கொண்டாடும்படி ஐம்பத்தோரு சாதுர்மாஸ்யங்கள் (வருஷங்கள்) ஆங்காங்கு எழுந்தருளியிருந்தார். அரவணையானுக் குறைவிடமான ஸ்ரீரங்கத்தின் மேற்கில் ஒரு மைல் தூரத்தில் வடதிருக்காவேரி தென்கரையிலுள்ள ஆச்ரமத்தில் (சரமதசை) கடைசிகாலத்தில் எழுந்தருளியிருந்து சுபாநுஸூ தைமீ 13வ கிருஷ்ணபக்ஷம் திரயோதசியில் சின்னாண்டவன் முதலிய திருவடியில் ஆச்ரயித்த சிஷ்யர்களும் மற்றுமாஸ்திகர்களும் உபநிஷத்துக்களை உச்சஸ்வரத்துடன் (உயர்ந்தகுரலுடன்) பாராயணம் செய்யத் திருநாட்டுக்கெழுந்தருளினர்.

இந்த ஸ்வாமி ஜீவதசையில் எழுந்தருளியிருந்தபோது ஸ்ரீபெரிய பெருமாள் என்னும் அழகிய மணவாளன் சைத்திரோத்ஸவத்தில் கருடஸேவை மண்டபத்திற்கு மேற்கே எழுந்தருளின ஸமயம் ஸ்வாமியின் ஆச்ரமத்துக்கு ஸமீபத்தில் எழுந்தருளியிருந்து விசேஷமாகத் தளிகைகள் அமுதுசெய்து உபயங்கண்டருளி அனுக்ரகிக்கப்பட்ட அழகிய மண்டபத்தின் மத்தியில் பிருந்தாவனத்தில் (திருப்பக்குழியில்) ஸ்ரீ ஸ்வாமியின் திருமேனியை எழுந்தருளப்பண்ணினர்கள். ஸ்ரீமதாண்டவன் உத்தர கைங்கர்யத்தை ஸ்வச்சந்தம் ஸ்ரீ. உப. வே நரஸிம்மாசார்யஸ்வாமிக்குப் பின்பு எல்லாக்கைங்கர்யங்களையும் செய்துவந்த ஷை ஸ்வாமியின் குமாரராகிய ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர்ஸ்வாமி அளவற்ற திரவியத்தால் அபரிமிதமான ததீயாராதனத்துடன் மகோத்ஸவமாக நடத்தினர்கள்,

(இன்னும் வரும்.)



பண்டையிருவினையாற்றிற் படிந்து பாரங்
காணதேயொழுகிய நாம்பாக்கியத்தால்
வண்டமருமலர்மாதுமின்னாய் மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டலருண்மழை பொழிய வந்த தொப்பாங்
குளிர்ந்து தெளிந்தமுதாய விரசையாற்றைக்
கண்டணுகித் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாங் கதித்திட்டோமே. 17

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ ப ர ம ப த ஸோ பா நே
|| அஷ்டமம் திவ்யதேசப்ராப்திபர்வ ||

[ப-ம்] பண்டை - அநாதியான, இருவினை - இருவகையான கர்மங்களாகிற, ஆற்றில் - நதியிலே, படிந்து - முழுகி, பாரம் - கரையை, காணாதே - அறியாமல், ஒழுகிய - அதின் ப்ரவாஹத்தின் வழியே போய்க்கொண்டிருக்கிற, நாம், பாக்கியத்தால் - அத்ருஷ்டவசத்தினால், இதுமேல் 'கதித்திட்டோமே' என்பதுடன் அந்வயிக்கிறது, வண்டமரும் - வண்டு ஸ்திரமாக வஸிக்கிற, அதாவது தேன் மிகுத்திருப்பதினாலே அதைப் பானம் பண்ணிக்கொண்டு அசையாமல் எப்பொழுதும் அதிலேயே இருக்கிறது என்றபடி, மலர்மாது - புஷ்பத்தில் வஸிக்கிற லக்ஷ்மீ, மின்னாய் - மின்னலாய், மன்ன - ஸ்திரமாக வஸிக்க, வைசயந்தி - வைஜயந்தி என்கிற வனமாலை, மணிவில்லாய் - ரத்னங்கள் இழைத்த தநுஸ்ஸாக, விளங்க - ப்ரகாசிக்க, வான் - பரமபதத்தை, ஆகாசத்தை என்றாகவுமாம், சேர் - அடைந்திருக்கிற, கொண்டல் - மேகம், இங்கு வைகுண்டநாதனை மேகமாக நிரூபித்தருளினபடி, அருள் - க்ருபையாகிற, மழை - மழையை, பொழிய - வர்ஷிக்க, வந்ததொப்பாம் - வந்ததற்கு ஸத்ருசமாக, குளிர்ந்து, தெளிந்து, அமுதாய - அம்ருதமயமான, விரசையாற்றை - விரஜாநதியை, கண்டு - பார்த்து, அணுகி - கிட்டி, கருத்தாலே - ஸங்கல்பத்தினாலே, கடந்து - தாண்டி, மீளா-

திரும்பிவருவது இல்லாத, கரை - அக்கரையை, பரமபதத்தை, கண்டோர்-கண்டவர்களினுடைய, கதியெல்லாம் - போகிற ப்ரகாரங்களையெல்லாம், அர்ச்சிராதிகதியை எல்லாம் என்றபடி, கதித்திட்டோம் - சொன்னோம். 17

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டித பூஷணம்
ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்
எட்டாவது திவ்ய தேஶ ப்ராப்தி பர்வம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥
॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥
॥ நவமம் ப்ராப்திபர்வ ॥

பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனார்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெரு நான்மறையோதிய கீதமெல்லாம்
பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவமே. 18

॥ ஸ்ரீ: ॥
॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

## ஒன்பதாவது ப்ராப்தி பர்வம்.

இப்படிக் கீழ் நிரூபிக்கப்பட்ட அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபதம் அடைந்தவனுக்கு உண்டாகிற பரிபூர்ண பகவதனுபவத்தையும் அதன் பரீவாஹமான கைங்கர்யங்களையும் இந்தப் பர்வத்தில் நிரூபிக்க ஆரம்பித்து முதலில் அதை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—'பூவளரும்' என்றாரம்பித்து.

[ப - ம்.] பூவளரும் - புஷ்பத்திலே வளருகிற, திருமாது - லக்ஷ்மீ என்று சொல்லப்படுகிற பெண்ணால், புணர்ந்த - ஆலிங்கனம் செய்யப்பட்ட, நம் - நம்முடைய, புண்ணியனார் - புண்யமாகிய ஶ்ரிய:பதி, ஸித்தோபாய பூதனான ஸர்வேஶ்வரன் என்றபடி, இத்தால் ந்யாஸம் செய்தபொழுது நம்முடைய பாரத்தை அங்கீகரித்துக்கொண்டு தான் உபாயாந்தர ஸ்தானத்திலே நின்று இப்படி ஸர்வ ப்ரகாரமாகவும் உதவிபுரிந்த ஶ்ரிய:பதி வீடு திருத்துவானைக்கொண்டு அங்கே போய் இருக்கிறான் என்றபடி, தாவளமான-நித்யவாஸ ஸ்தானமான, தனி - ஒப்பற்ற, திவம் - ஆகாசத்தை, பரமபதத்தை என்றபடி, சேர்ந்து - அடைந்து, தமருடனே - அங்கிருக்கும் நித்ய முக்தர்களோடு, இதுமேல் 'பாடுவமே' என்பதுடன் அந்வயிக்கிறது, 'அடியார்கள் குழாங்களுடன் கூடுவது என்றுகொலோ' என்று ப்ரார்த்தித்தபடியே நித்ய முக்தர்களுடன் கூடி என்று தாத்பர்யம், அன்றிக்கே 'தமருடனே சேர்ந்து' என்றந்வயித்து நித்ய ஸூரியான அமானவனுடன் கூடச் சென்று பரமபதமடைந்து என்றர்த்தமாகவுமாம், நா - நாக்கில், வளரும் - வளருகிற, நாவினால் உச்சரிக்கப்பட்டு ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருகிற என்றபடி, பெரு - பெருத்த

இப்படி அதிஸுந்தரமான அநந்தபோக பர்யங்கத்திலே ரஜதகிரியின்மேலே மரதககிரியிருந்தாற்போலே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து விண்ணோர் தலைவனாய், அகௌமாரயௌவனனாய், 1 ‘சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு’ என்னும்படி ஸூர்யாயுதஸஹஸ்ர ஸங்காஶம்போலே அநவதிகதேஜஸ்ஸையுடையனாய், 2 ‘விஶ்வமாப்யாயயந் காந்த்யா பூர்ணேந்த்வயுத துல்யயா’ என்னும்படி அநவதிகஶீதலாவண்யத்தையுடையனாய்,

வைகளான, நான்மறை - நாலு வேதங்களில், ஓதிய - சொல்லப்படுகிற, கீதமெல்லாம் - கானங்களையெல்லாம், ஶ்ருதிகளில் சொல்லப்படுகிற ஸாம கானங்களையெல்லாம் என்றபடி, பாவளரும் - பாட்டுக்களினால் வளர்ந்திருக்கிற, தமிழ் - தமிழ் பாஷாரூபமான, பல்லாண்டு - ‘பல்லாண்டு’ என்றாரம்பிக்கும் திவ்ய ஸூக்தியை, இசையுடன் - கானத்துடன், பாடுவம் - பாடப்போகிறோம், நாம் என்று சேர்த்துக்கொள்ளவும், அன்றிக்கே பாடும்படி ஆகக்கடவோம் என்றாகவுமாம். 18

இனி பரிபூர்ணமான ப்ரும்மானுபவ ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார் - ‘இப்படி’ என்றாரம்பித்து. அதிஸுந்தரமான - மிகவும் அழகான, அநந்த - ஆதிசேஷனுடைய, போக - உடலாகிற, பர்யங்கத்திலே - ஸிம்மாஸனத்திலே, ரஜதகிரி - வெள்ளிமலை, மரதககிரி - பச்சைக்கல் மயமான மலை. ஏழுலகும் - ஸப்தலோகங்களிலும், தனி - அத்விதீயமான, கோல் - செங்கோல், ஆஜ்ஞை என்றபடி, செல்ல - செல்லும்படி (நடக்கும்படி), வீற்றிருந்து - தன்னுடைய மேன்மை தோன்றும்படி இருந்து, விண்ணோர் - நித்யஸூரிகளுக்கு, தலைவனாய் - நிர்வாஹகனாய், அகௌமாரயௌவனனாய் - கௌமாரம் என்கிற நிலை உண்டாகிப் பிறகு யௌவனம் உண்டாயிற்றென்பதில்லாமல் எப்பொழுதும் யௌவனத்தை உடையவனாய், சோதி - ஜ்யோதிஸ்ஸினுடைய, வெள்ளத்தினுள்ளே - ப்ரவாஹத்தின் நடுவிலே, எழுவது - ஆவிர்ப்பவிக்கிற, ஓர் - அத்விதீயமான, உரு - ரூபம். ஸூர்யாயுதஸஹஸ்ர - லக்ஷம் ஸூர்யன்களுடைய, ஸங்காஶம் - சேர்க்கை, அநவதிக - எல்லையில்லாத. பூர்ணேந்த்வயுத - பூர்ண சந்திரன்களுடைய லக்ஷங்களுக்கு, துல்யயா - ஸமானமான, காந்த்யா - காந்தியினால், விஶ்வம் - ப்ரபஞ்சத்தை, ஆப்யாயயந் - த்ருப்தி செய்வித்துக் கொண்டு; ‘ஶீதலாவண்ய’ மாவது விசேஷமான ப்ரகாசத்தில் அதிகக்குளிர்ச்சியிருப்பது. ‘ஹ்ரியிஷ்டம் தேஜ ஸர்வாங்கை: ஸம்ஸாரஹிதம் க்ருதம் । வக்ஷ்யாமா

1 திருவாய்மொழி-5-5-10. 2 ராமாயணம்-



ஸர்வஶேஷியான தன்னுடைய க்ருபையும் க்ஷமையும் வண்மையும் வடிவுகொண்டாற்போலேயிருக்கிற நாச்சிமார்களில் ஸ்வாபிமத நித்ய நிரவத்ய அநுரூப ஸ்வரூபாதிகளை யுடையவளாய், ஸர்வஸ்வரூபவ்யாப்த்தாலே ஸதாநுபவம் பண்ணாநின்றாலும் இன்றனுபவிக்கத் தொடங்கினாற்போலே ஆஶ்சர்யரஸாவஹையாய், 1 ‘ஶாந்தாநந்த’ இத்யாதிகளின்படியே ஸர்வப்ரகாரஸம்ஶ்லேஷத்தையுடைய

நந்தநந்தம் ஶ்ராவண்யமிதி கத்யதே॥’ என்னப்பட்டதிறே. அன்றிக்கே முத்தில் இருக்கும் பளபளப்புப்போன்ற பளபளப்பைஉடைய என்றாகவுமாம். ‘க்ருபைவ’ இத்யாதி—க்ருபையே வடிவுகொண்டாப்போலே பெரிய பிராட்டியும், பொறுமையே வடிவுகொண்டாப் போலே பூமிப் பிராட்டியும், ஔதார்யமே வடிவுகொண்டாப் போலே நீளாதேவியும் இருக்கிறார்கள் என்றபடி ஸ்வாபிமத - தனக்கு மிகவும் இஷ்டமாய், நித்ய - அழிவில்லாததாய், நிரவத்ய - தோஷங்கள் ஒன்றும் இல்லாததாய், அநுரூப - தனக்கு மிகவும் அனுகுணமான, ஸ்வரூபாதிகளை - ஸ்வரூபம், ரூபம், குணம், ஐஶ்வர்யம் முதலியவைகளை, ஸர்வஸ்வரூபவ்யாப்த்தாலே - தான் ப்ரபஞ்சத்திற்கெல்லாம் அந்தர்யாமியாக இருக்கும் ரூபத்தாலே, ஸதாநுபவம் - எப்பொழுதும் பிரியாமல் அனுபவித்துக்கொண் டிருந்தாலும், இன்று - இப்பொழுது. ஆஶ்சர்யரஸாவஹையாய் - ஆஶ்சர்யமான ரஸானுபவத்தைக் கொடுக்கக்கூடியவளாய், ‘ஶாந்தாநந்த’ இத்யாதி— * ‘ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே: மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத் ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம் । யாந்யந்யாநி யதா ஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவை: காடோபகூடாநி தே॥’ என்கிற ஶ்லோகத்தில்

* விகாரங்கள் ஒன்றும் இல்லாத அளவில்லாத பெரிய விபூதிகளையுடைய எல்லா வஸ்துக்களையும்விட மேலான ப்ரும்மமென்று சொல்லப்படுகிற எந்த விஷ்ணுவினுடைய ஸ்வரூபமோ, அந்த ஸ்வரூபத்தைவிட அந்தப் பகவானுக்கு மிகவும் ப்ரியமாகிய மிகவும் ஆஶ்சர்யமான அவயவங்களோடு கூடிய ப்ரும்மமென்று சொல்லப்படுகிற எந்தப் பரவாஸுதேவ விக்ரஹமோ, ஸுகமாக விளையாடுகிற அந்தப் பகவானுடைய வேறு எந்த அவதார விக்ரஹங்களோ, அவைகள் எல்லாம் உன்னுடைய அஸாதாரணங்களாகிய அனுகுணங்களாகிய ஸ்வரூபம் முதலியவைகளாகிய ஸம்பத்துக்களினால் நெருக்கமாகச் சேர்ந்திருக்கின்றன.

1 ஸ்ரீசதுஶ்ஶ்லோகீ-4.

ளாய், மார்பத்து மாலை நங்கையாய், அமுதில் வரும் பெண்ணமுதாய், வேரிமாறாத பூமேலிருந்து வினைதீர்க்குமவளாய், தன் கடாக்ஷலேஶத்தாலே ப்ரஹ்மாதிவைபவத்தையும் கொடுக்குமவளாய், 'தேவதேவதிவ்யமஹிஷீ' என்னும்படியான மேன்மையும், 'காருண்யாஸ்ரநதமுகீ' என்னும்படியான நீர்மையுமுடையவளான பெரிய பிராட்டியார் 'தாக்ஷிண்யவஸீமா' வென்று தோற்றும்படி தக்ஷிணவக்ஷஸ்தலத்திலே நீரதத்தை யணைந்த நிலைமின்போலே ஸேவித்திருந்து தன்னுடைய ஶேஷிகளோ ஸ்வகைங்கர்யவ்ருத்திஸம்வாஞ்சிதங்களைப் பூரித்துக்கொண்டு ஸ்வபரிஜநங்களை அவஸ

சொல்லப்பட்டபடியே என்றபடி. ஸர்வப்ரகாரஸம்ஶ்லேஷத்தை - ஸ்வரூபத்தில் தன் ஸ்வரூபத்தாலும், விக்ரஹத்தில் தன் விக்ரஹத்தினாலும், அவதாரங்களிலும் தன்னுடைய அவதாரங்களினாலும் சேர்ந்திருப்பதை என்றபடி. மார்பத்து - மார்பிலே இருக்கிற, மாலை - மாலைபோல் போக்யையான, நங்கை - நல்ல குணங்கள் நிறைந்தவளான ஸ்திரீ, அமுதில் - அம்ருதத்தில், வரும் - ஆவிர்ப்பவித்த, பெண்ணமுதாய் - ஸ்திரீ ரூபமான அம்ருதமாய், அதாவது அம்ருதம் கோதாகும்படி அதின் ஸாராம்ஶமாய் ஆவிர்ப்பவித்தவளான பெண்ணமுது என்றபடி, வேரி - வாஸனை, மாறாத - அழியாத, பூமேல் - புஷ்பத்தின்மேல், இருந்து, வினை - பாபங்களை, தீர்க்குமவளாய் - போக்கடிக்குமவளாய், கடாக்ஷலேஶத்தாலே - கடாக்ஷத்தின் ஒருபாகத்தாலே (ஏகதேசத்தாலே) ப்ரஹ்மாதி - ப்ரும்மா முதலியவர்களினுடைய, வைபவத்தையும் - ஐஶ்வர்யத்தையும், தேவதேவ - தேவதைகளுக்கு எல்லாம் தேவதையான பகவானுடைய, திவ்யமஹிஷீ - பட்டத்து ஸ்திரீ, என்னும்படியான - என்று சொல்லக்கூடியதான, மேன்மை - உத்கர்ஷம், பரத்வம் என்றபடி. காருண்யா - தயையினால் உண்டான, அஸ்ர - கண் ஜலத்தை உடையதாயும், நத - வணங்கியும் இருக்கிற, முகீ - முகத்தை உடையவள், நீர்மை - ஸௌலப்யம். தாக்ஷிண்யவஸீமா - ஸாமர்த்யத்திற்கு எல்லை, தெற்கு திக்குக்கு எல்லை என்றும் ஒரு அர்த்தம் த்வனிக்கிறது. தக்ஷிணவக்ஷஸ்தலத்திலே - தெற்குப் பக்கத்திலே அணைந்த - தழுவிக்கொண்டிருக்கிற, நிலைமின் - ஸ்திரமான மின்னல், மின்னல் க்ஷணம் தோன்றி அழிந்துவிடுமாதலால் அது ஸரியான த்ருஷ்டாந்தமாகாதென்று திருவுள்ளம்பற்றி ஸ்திரமான மின்னலுடன் கூடின என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸேவித்திருந்து - ஆஶ்ரயித்துக் கொண்டிருந்து. கைங்கர்யவ்ருத்திஸம்வாஞ்சிதம் - கைங்



ரோசிதாஶேஷஶேஷவ்ருத்திகளிலும் ஆஜ்ஞாபிக்க, 1 'ஏவம்பூத பூமிநீளாநாயக' என்கிறபடியே பெரியபிராட்டியாருடைய ரூபாந்தர மென்னலாம்படி அநவரதபஹுமாநவிஷயையாய், பச்சைமாமலைபோல் மேனிக்கும் படிமாவான நிறத்தையுடையளான பாரென்னும் மடந்தையும், அல்லிமலர்மகள்போக மயக்குகள் அத்ருஶ்யமென்னும்படி நித்யவைஶத்யம் நின்றவிடந்தெரியாதே 2 'நீளாதுங்கஸ்தநகிரிதடீ ஸுப்தம்' என்னப் பண்ணுமவளாய், நீலோத்பலஶ்யாமளையான ஸ்ரீநீளைப் பிராட்டியும், அடியார் இடத்திலே ஸேவித்திருக்கும்படி தாங்களுமிடத்திலே ஸேவித்திருக்க, 3 'ஸேவ்ய: ஸ்ரீ

கர்யத்திற்கு உத்தேஸ்யர்களாய் இருக்கை, பூரித்துக்கொண்டு - பூர்த்திசெய்வித்துக் கொண்டு, இந்தப் பெரிய பிராட்டியாரில்லாவிடில் கைங்கர்யோத்தேஸ்யத்வத்திற்குப் பூர்த்தியில்லை என்றபடி. அவஸரோசித - அந்தந்த ஸமயங்களுக்குத் தகுந்த, அஶேஷ - எல்லா, ஶேஷவ்ருத்திகள் - கைங்கர்யங்கள். ஏவம்பூத - இப்படிப்பட்டவர்களான, அதாவது கீழ் நிரூபித்தருளின பெரிய பிராட்டியாருக்கு ஸத்ருஶமான, பூமிநீளாநாயக - பூமிப்பிராட்டி, நீளாதேவி, இவர்களுக்கு நாயகனே. ரூபாந்தரம் - மற்றொரு விதமான அவதாரம். அநவரத - ஒழிவில்லாமல், அதாவது எப்பொழுதும், பஹுமாநவிஷயையாய் - பஹுமானத்திற்குப் பாத்திர பூதையாய், பச்சை - பச்சைநிறமான, மா - பெரிய, மலைபோல் - பர்வதம் போன்ற, மேனிக்கும் - திருமேனிக்கும், படிமாவான - ஸத்ருஶமான, பார் என்னும் - பூமி என்று சொல்லப்படுகிற, மடந்தையும் - ஸ்திரீ, பூமிப்பிராட்டியும் என்றபடி, அல்லி - குளிர்ந்த, மலர் - புஷ்பத்திலே வஸிக்கிற, மகள் - பெரிய பிராட்டியாருடைய, போக - அனுபவத்தினால் உண்டான, மயக்குகள் - மயக்கங்கள், நித்யவைஶத்யம் - நித்தியமான ஜ்ஞானம், நீளா - நீளாதேவியினுடைய, துங்க - உன்னதங்களான, ஸ்தநகிரிதடீ - ஸ்தனங்களாகிற மலையின் தாழ்வரையில், ஸுப்தம் - தூங்கிக்கொண்டிருக்கிற. நீலோத்பல - கருநெய்தல் புஷ்பம்போல், ஶ்யாமளையான - கறுத்த நிறமுள்ளவளான, அடியார் - தாஸர்கள், இடத்திலே - அவரவர்கள் கைங்கர்யம் பண்ணும் ஸ்தானங்களில். தாங்களும், இடத்திலே - இடது பக்கத்திலே, ஸ்ரீ: - பெரிய பிராட்டியார், பூ - பூமிப் பிராட்டியார், நீளாபி: - நீளாதேவி, இவர்களினால், ஸேவ்ய: - ஸேவிக்கத் தகுந்தவன். உடன் -

1 கத்யம். 2 திருப்பாவை தனியன் 3

ஸஹிதீஸ்ஸஹி:', 1 'உடனமர் காதன்மகளிர் திருமகள் மண்மகளாயர் மடமகளென்றிவர் மூவர்' இத்யாதிகளில் சொன்ன சேர்த்தியிலே அடிமை செய்யுமவர்களுக்கு [illegible]மென்றும் [illegible]மென்றும் சொல்லும்படியான நிரதிசய போக்யத்தை யுடையனை நிர்ஹேதுகமாயிருக்கு[illegible]ஷியை நிர்ஹேதுகஜ்ஞாநவிகாஸத்தாலே 2 'அவாவறச் சூழ்ந்தாய்' என்னும்படி அநுபவித்து, 3 'தத்தாமலி த்வத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்' என்றும், 4 'நாற்றோளமுது' என்றும் பேசப்பட்டு குன்றாடுகொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு

---

தன்னுடன் கூட, அமர் - அமர்ந்திருக்கிற, ஏகாஸனத்திலே இருக்கிற என்றபடி; காதல் - ப்ரீதிக்குப் பாத்திரமான, மகளிர் - தேவிகள், திருமகள் - பெரிய பிராட்டியார், மண்மகள் - மண் என்னப்படும் மகள், மண்ணுக்கு (பூமிக்கு) நிர்வாஹகை யென்னவுமாம், பூமிப்பிராட்டி என்றபடி, ஆயர் - இடையர்களுடைய, மட - மௌக்த்யத்தை உடையவளான, மகள் - பெண், நப்பின்னைப்பிராட்டி என்றபடி, இவள் நீளாதேவியின் அவதாரமானபடியினால் அவளைச் சொல்லியபடி என்றறியத்தக்கது, என்றிவர் மூவர் - என்று சொல்லப்பட்ட இந்த மூன்று பேர்களுடம், 'சேர்த்தியிலே' என்றது மேல் 'அநுபவித்து' என்பதோடு அந்வயிக்கிறது. நிர்ஹேதுக-ஒரு காரணத்தினால் அல்லாமல் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட, ஜ்ஞாநவிகாஸத்தாலே - ஜ்ஞானத்தின் பரவுதலாலே, அவா - ஆசை, அற - தீரும்படி, சூழ்ந்தாய் - வ்யாபித்தாய், வந்து நிறைந்தாய் என்றபடி, தத்தாமலி - அந்த ஸ்வரூபத்தைக் காட்டிலும், த்வத்ப்ரியதரம் - அந்தப் பகவானுக்கு மிகவும் ப்ரியமாய், அத்யத்புதம் - மிகவும் ஆஶ்சர்யமான, யத் - எந்த, ரூபம் - திவ்யமங்கள விக்ரஹமோ. நாற்றோள் - நான்கு தோளுடைய, அமுது - அம்ருதம், அதைப்போல் போக்யம் என்றபடி, குன்று - பர்வதத்தில், ஆடு - ஸஞ்சரிக்கிற, கொழு - ஶ்லாக்யமான, முகில்போல் - மேகம்போலும், குவளைகள்போல் - கருநெய்தல் புஷ்பங்கள் போலவும், குரை - ஶப்திக்கிற, கடல்போல் - ஸமுத்திரம் போலவும், நின்றாடு - நின்றுகொண்டு நர்த்தனம் பண்ணுகிற; கண்மயில்போல்-கண்களால் நிறைந்த மயிலைப்போலவும், இங்கு கண்கள் என்றது மயில் தோகையில் இருக்கும் கண்கள் போன்ற ரேகா விஶேஷத்தைச் சொல்லுகிறது, நிறமுடைய - வர்ணத்தையுடைய, பொன்னின் வண்ணம் - ஸ்வர்

---

1 திருவாய்மொழி-1-9-4. 2 திருவாய்மொழி-10-10-10.
3 ஸ்ரீசதுஶ்ஶ்லோகீ-4. 4 திருவாய்மொழி-5-8-7.



[illegible]" இதி। உபநயந்தி — நிவேதயந்தி [illegible] [illegible] ஸ்ரீஸாத்வதே [illegible] [illegible]

---

சொல்லப்பட்டிருக்கிறது. 'உபநயந்தி' என்பதற்கு நிவேதனம் செய்ய வேண்டும் என்றர்த்தம். 'குருதே' என்பதற்குத் தனக்கு ஆஹாரமாகச் செய்து கொள்ளுகிறுன் என்றர்த்தம். அப்படியே ஸாத்வத ஸம்ஹிதையில் ஆராதனத்தைச் சொல்லும் இடத்தில் 'பிறகு தேஹயாத்திரைக்காகப் பகவானை ப்ரார்த்தித்து அவரிடத்தில் இருந்து உத்திரவு பெற்றுக்கொண்டவனுய் அப்படியே சாஸ்திரமுறைப்படி ஆத்மயாகத்தைச் செய்யவேண்டும், தான் ஸாப்பிடக்கூடியதான ஆஹாரத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டவஸ்து முதலாக எல்லாவற்றையும் போஜனம்செய்யும் பாத்திரத்தில் வைத்துவிட்டு ஜலத்தினுல் ப்ரோக்ஷணம்செய்து ஸத்யனுகிய பகவானுக்கும் லக்ஷ்மிக்கும் (நிவேதனம் செய்வது) அன்னத்தின் தோஷத்தைப் போக்கடிக்கக்கூடியது' என்றிவை முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் பார்க்கத்தகாத ஜனங்களால் பார்க்கப்பட்டிருக்கை அதிகக்காலம் கழித்ததாயிருக்கை முதலிய தோஷங்கள் நேரக்கூடும் என்கிற எண்ணத்தினுல் அதை நிவ்ருத்தி செய்வதற்காக பரிசுத்தம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்டதை ஸாப்பிடுவது மிகவும் நன்மையைக் கொடுக்கக்கூடியது என்று அவ்விடத்திலேயே நிரூபிக்கப்பட்டிருப்பதினுலும், அப்படிக்கில்லாவிடில் அநுயாகம் வேறு ஒருவஸ்துவினுல் செய்யப்பட வேண்டி வருமாதலாலும், 'சேறையத்திக்கொண்டு அலம்புவதைவிட அதைத்தொடாமல் விலகிப்போவது மேலானது' என்று நியாயம் சொல்லியிருப்பதினுலும். (அதாவது பகவானுக்கு நிவேதனம் செய்ததினுல் உண்டான தோஷத்தை நிவ்ருத்தி செய்வதற்காகப் பரிசுத்திசெய்ய வேண்டும் என்றுசொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லுவது பொருத்தமுடையதாகாதுஎன்று தாத்பர்யம்). மேலும் 'யானையினுல் ஸாப்பிடப்பட்ட விளாம்ப

[illegible]

முத்தினுடைய ஸாராம்சத்தை எப்படி அந்த யானை எடுத்துக்கொள்ளுகிறதோ அப்படியே ஹவிஸ்ஸினுடைய ரஸத்தை பகவான் க்ரஹித்துவிடுகிறான்' என்றிவை முதலிய வசனங்களினால் முதலில் நிவேதனம் செய்யும் பொழுது அதினுடைய ஸூக்ஷ்மாம்சத்தைத் தானே க்ரஹித்துக்கொண்டு ஆசார்யன் முதலியவர்களின் வழியாக அந்தஹவிஸ்ஸினுடைய ப்ரத்யக்ஷத்தினால் அறியப்படக்கூடிய ஸ்தூலமான அம்சத்தையும் பகவானே க்ரஹித்துக் கொள்ளுகிறார் என்று அறியப்படுகிறது. அப்படியே ஸ்ரீபௌஷ்கர ஸம்ஹிதையில் போகத்தை நிர்ணயம் செய்யும் அத்யாயத்தில் வஸ்துக்களை நிவேதனம் செய்யும் ப்ரகாரத்தைச்சொல்லி ' எந்தக்காரணத்தினால் அழிவில்லாததான வஸ்துக்களின் சக்தியை முதலில் தான் அங்கீகரிக்கிறார். பிறகு ஆசார்யன் முதலியவர்களின் முகமாக ப்ரகாசமாயிருக்கிற அதின் அம்சத்தை அனுபவிக்கிறார், ஆகையினால் உபசாரத்திற்குப் போகம் என்று சொல்லப்படும் தன்மை போஜனம் செய்யப்படுகிறபடியினால் ஏற்பட்டது ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் " [illegible] " என்று பாடமாயிருந்தபோதிலும் 'கஞ்' என்கிற ப்ரத்யயத்தைக் கடைசியில் உடைய தாகையினால் இதே அர்த்தத்தை உடையது. இவ்விடத்தில் அபிப்ராயமாவது—ஸாப்பிடப்படுகிறது ஆகையினால் போகம் என்று சொல்லப்படுகிறது, கஞ் ப்ரத்யயத்தைக் கடைசியில் உடைய தாகையினால் போக என்னும்பதம் இவ்விடத்தில்சொல்லப்படுகிறது. கேவலம் ரூடியாய் (இடுகுறிப்பெயராய்) அல்ல. ரஹஸ்யாம்நாயத்திலும் பகவானுக்கு ஆராதனம் செய்கிறபடியினாலேயே இது போகமாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது ' அவ்விடத்தில் அறுபத்திநாலு கணக்குள்ள உபசாரங்களினால் க்ரமப்படி ராஜாக்களை உபசாரம் செய்வதைப்போல உபசாரம் செய்யவேண்டும் ' என்றிவை முதலிய அனே



[illegible]

கம் இடங்களில் ராஜாக்களைப்போலவே பகவானும் எல்லா உபசாரங்களையும் அங்கீகரிக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மந்திரத்தினால் உண்டான எந்த உயர்ந்தசக்தியோ ' என்றாரம்பித்து ' தேஹத்தில் இருக்கும் ஜீவாத்மா என்னும் தத்வம் சப்தம் முதலிய போகத்தை எப்படி அனுபவிக்கிறதோ அப்படியே புண்யங்களினால் அவதாரம் செய்கிற பகவான் அங்கீகரிக்கிறார் ' என்று சொல்லப்படுகிறது. அதுவும் ஔபசாரிகம் (உபசாரத்திற்காக ஸமர்ப்பிக்கப் படுகிற தீபம் முதலியவைகள்), ஸாம்ஸ்பர்சிகம் (சரீரத்தினால் தொட்டு அனுபவிக்கக்கூடிய சந்தனம் புஷ்பம் (முதலியவைகள்) இவைகளில் ஸம்பவிக்கிறன. போஜனம் செய்யக்கூடிய வஸ்துக்களில் இது ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாய் இருக்கிறது என்கிற ஆக்ஷேபத்தை நிராகரிப்பதற்காக ஸூக்ஷ்மாம்சம் என்றும் ஸ்தூலாம்சம் என்றும் பிரித்து அதை அனுபவிப்பதினால் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதம் இல்லை. பகவான் போகத்தை அங்கீகரிப்பது ஸ்தூலாம்சத்தை க்ரஹிக்கிற வரையிலாக, அதினாலேயே திருவாராதனத்திற்குப் பூர்த்தி சொல்லப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. மேலும் அதில் சயனத்தில் சொல்லும் அத்யாயத்தில் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்துடன் பாகம் செய்த பாத்திரத்தில் மிகுதியாயிருந்த ஜலம் பழம் முதலியவைகளினால் எந்த ஆராதனம் செய்யப்படுகிறதோ அது அனுயாகம் என்னப்படுகிறது. அணுவாகிய ஜீவாத்மா ஸித்திப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதினாலும் இது அணுபாகம் என்றும் அறியத்தக்கது. அந்த யாகத்தில் ஹ்ருதயத்தில் இருக்கும் அக்னியை சரீரமாக உடைய பகவானே அமுதுசெய்கிறார், அவருடைய சக்தியின் ஒத்தாசையினால் அணுவாயும் அஹம்என்

ह्यु होमावयवं रूपं पाकाशनांशे प्राप्नोति रूपं पावकस्वादु भवतीति स्पष्टमुच्यते— "अणुमात्रकं विज्ञेयं विहितं तस्य सवयुधा । शुद्धेनैवात्र सिद्ध्यर्थं यागश्च तेन तेन च । सहयज्ञावशिष्टेन स्वान्नेनाव महाहिना । अनुयागं च तं विद्धि शुद्धेनात्मनि यश्च कृतः । कृतयुक्ति होजनाच्च पवित्रं प्रातर्हि प्राशनं तथा । तद्भक्तिग्रहणं प्राणैः प्रयोजनवशात्तथा । सावधानं सदा यत्नाः सन्मार्गस्थाः दृढव्रताः । अप्रयत्नेन ते यान्ति देहान्ते चाक्षयं पदम् ॥" इत्यादि । तथा— सर्वस्य यजमानानां हृत्स्थः पावकेश्वरः । तच्छक्त्या गृहीतश्चासौ सोऽहं प्रकृतितः पात्यनु" इति । तथा नारदीय संहितायाम्— "तच्च कार्मुकेनोपभुङ्क्ते भगवान् भक्तवत्सलः । यथाग्निमुखा देवाः तथा

---

னும் பதத்தின் அர்த்தமாயும் இருக்கிற ஜீவாத்மா ஐச்வர்யம் மோக்ஷமாகிய புருஷார்த்தங்களை அடைவதற்கு அனுகுணமான சக்தியை உடையவனாகிறான்' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. அந்த ஆத்மா என்கிற தத்வமானது அணு என்று அறியத்தக்கது. அதற்குத் தன்னாலேயே தன்னுடைய தத்வம் ஸித்திப்பதற்காக அன்னத்தினால் யாகம் விதிக்கப்பட்டிருக்கிறது. அது ஆராதனத்தின் மிகுதியான ஜலத்துடன் சேர்ந்தபழம் முதலியவைகளினாலும் செய்யவேண்டியது, தன்னாலே தன்னிடத்திலேயே செய்யப்பட்ட யாகத்தை அநுயாகம் என்றுஅறி, எவர்கள் தினம்தோறும் ஸாப்பிடுவதற்கு முன்பு இந்த நிவேதிதத்தைப் போஜனம்செய்கிறார்களோ சில காரணங்களினால் மூக்கினால் அதினுடைய சக்தியையாவது அங்கீகரிக்கிறார்களோ அவர்கள் பகவானிடத்தில் பக்தியை உடையவர்களாயும் நல்லவழியில் நிஷ்டையுடையவர்களாயும் உறுதியான வ்ரதத்தை உடையவர்களாயும் தேஹத்தின் முடிவில் ப்ரயத்னமில்லாமலே அழிவில்லாத ஸ்தானத்தை அடைவார்கள்' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே 'எல்லாவற்றிற்கும் யஜமானனாகிய பரமாத்மா ஹ்ருதயத்தில் இருக்கும் அக்னியை சரீரமாக உடையவனைக்கொண்டு அனுபவிக்கிறார், அவருடைய சக்தியினால் ஒத்தாசை செய்யப்பட்டிருக்கிறபடியினாலே நான் என்பதையே ஸ்வபாவமாக உடைய அந்த ஜீவாத்மாவும் அனுபவிக்கிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே நாரதீயஸம்ஹிதையில் 'அதையும் பக்தர்கள் இடத்தில் மிகுந்த கருணையுடைய பகவான் காரிகள் முகமாக அனுபவிக்கிறார், எப்படி தேவதைகள் அக்னியை முகமாக உடையவர்களோ அப்படியே பகவான் காரிகளை முகமாக உடையவர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.



कार्मुकोपहारिः ॥"

इति । ननु वैश्वदेवावशिष्टं चेव सोऽयम् । तत्र देवतान्तरविषयः । ततः कथं भगवन्निवेदितेन देवतान्तरयजनम्? तथा सत्यतिप्रसङ्गात् । यद्यपि श्रुतिस्मृतीतिहासादिषु तेषां भगवत्पुत्रशिष्योपासकत्वप्रतिपादनात् तेषामुच्छिष्टं प्राशनीयम्, तथापि नास्माभिः भगवन्निवेदितं तेभ्यो देयम् । नहि लोके पुत्रशिष्यादीन् भोजयन्तः पित्राचार्यादीन् भोजयित्वा तदुच्छिष्टेन भोजयन्ति । अतो भगवन्निवेदितस्य वैश्वदेवे विनियोगायोगेन तदवशिष्टस्य सम्भवाभाव इति चेत् - भगवन्निवेदितेनैव देवतान्तराराधनस्य तत्तृप्तेश्च विहितत्वात् । तथाहि पाद्मे चर्यापादे द्वादशाध्याये— "विष्णोर्निवेदितान्नेन यष्ट

---

ஆகிலும்வைச்வதேவம்செய்துமிகுதியாயிருப்பதேஸாப்பிடத்தகுந்தது, அந்த வைச்வதேவமும் இதரதேவதைகளைப்பற்றியது, ஆகையினால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதினாலேயேமற்றத்தேவதைகளையும் ஆராதனம் செய்யவேண்டும் என்பது எப்படி ஸம்பவிக்கும்? அப்படியாகில் அதிப்ரஸங்கம் வருகிறபடியினால். (அதாவது இதர தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்டதைக்கொண்டு பகவானுக்கு நிவேதனம் செய்யலாம் என்று சொல்லவேண்டிவரும் என்றபடி) அனேகங்களான ச்ருதிகள் ஸ்ம்ருதிகள் இதிஹாஸங்கள் முதலியவைகளினால் அவர்கள் பகவானுக்குப் புத்திரர்கள் என்றும் சிஷ்யர்கள் என்றும் பகவானை உபாஸிப்பவர்கள் என்றும் என்றிவை முதலாகச் சொல்லப்படுகிறபடியினால் அந்தத் தேவதைகளினால் அந்த ஸாப்பிடப்பட்ட மிகுதியானது ஸாப்பிடக்கூடியதாகும். அப்படியிருந்தபோதிலும் நம்மால் அந்தப் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டது அவர்களுக்கு நிவேதனம் செய்யக்கூடியதாகாது. லோகத்தில் பிள்ளை சிஷ்யன் முதலியவர்களைப் போஜனம் செய்விப்பவர்கள் தகப்பனார் ஆசார்யன் முதலியவர்களைப் போஜனம் செய்வித்து அவர்கள் ஸாப்பிட்ட மிகுதியினால் அவர்களைப் போஜனம் செய்விக்கிறதில்லையல்லவா, ஆகையினால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதை வைச்வதேவத்தில் உபயோகப்படுத்துவது பொருந்தாதாகையினாலே வைச்வதேவத்தின் மிகுதி என்பது ஸம்பவிக்காததலால் அது ஸாப்பிடத்தகாதது என்று எண்ணுவாயேயானால் அது உசிதமல்ல— பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதினாலேயே இதரதேவதைகளுக்கு ஆராதனம் செய்யவேண்டும் என்பதும், த்ருப்தி உண்டாகிறது என்பதும் விதிக்கப்பட்டிருப்பதினால், அப்படியே பாத்மஸம்ஹிதையில் சர்யபாதத்தில் பனிரெண்டாவது அத்

[illegible]

யாயத்தில் 'விஷ்ணுவிற்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தினாலே இதரதேவதைகள் ஆராதனம் செய்யத்தக்கவர்கள். பித்ருக்களுக்கும் அதுவே கொடுக்கத்தக்கது, அது அளவில்லாத பலத்திற்குக் காரணமாகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாரமேச்வரஸம்ஹிதையில் ஆராதனத்தைப்பற்றிச்சொல்லும் அத்யாயத்தில் 'எவர்கள் பித்ருக்களையும் தேவதைகளையும் ஆசார்யர்களையும் ஆராதிக்கிறார்களோ அவர்கள் முன்னால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தினுடைய ஒருபாகமாயும் தான் அனுயாகம் செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாயும் இருக்கிறது எதுவோ அதில் இருந்து கொஞ்சம் எடுத்து பித்ருக்களுக்கும் பந்துக்களுக்கும் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கும் விபாகம் செய்யவேண்டும், அப்படி விபாகம் செய்தமிகுதியினால்தான் அனுயாகம் செய்யவேண்டியது. அன்றிக்கே ஸ்தாலியில் (பாகம்பண்ண பாத்திரத்தில்) மிகுதியாயிருக்கிற பாகத்தில் இருந்து பாத்திரத்தில் வைத்துக்கொண்டு முன்போல் பகவானுக்கு நிவேதனம் செய்துவிட்டு அதினால் பித்ரு கார்யத்தைசசெய்யவேண்டும், எந்த ப்ராமணர்கள் வைச்வதேவம் நித்யமாகச் செய்துகொண்டிருக்கிறார்களா அப்படிப்பட்ட வைஷ்ணவர்கள் பகவானால் அமுதுசெய்யப்பட்ட மிகுதியில் சில பாகத்தை எடுத்துக்கொண்டு அத்தால் வைச்வதேவத்தைச்செய்து மிகுதி பாகத்தினால் ப்ராணாக்நிஹோத்திரத்தை சாஸ்திரமுறைப்படிச்செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஸாத்வதஸம்ஹிதையில் ஆராதனத்தைச்சொல்லும் பரிச்சேதத்தில் 'பித்ருக்களுக்கு விபாகம் எப்படிச்செய்யவேண்டுமோ அப்படிச் சொல்லப்படுகிறது' என்றாரம்பித்து 'அவ்விடத்தில்க்ரமமாக பித்ருக்கள் பிதாமஹர்கள்



[illegible]

இவர்களை த்யானம் செய்யவேண்டும், எல்லோருக்கும் த்ருப்தி உண்டாவதற்காக முதலில் பகவானுக்கு நிவேதனம் செய்துவிட்டு புரோக்ஷணம் செய்யப்பட்ட அன்ன பாத்திரங்களையும் நாலு கபளங்களையும் பூமியில் உள்ளங்கை மேல் நோக்கியிருக்கும்படி வைத்துப்பிறகு அர்க்கியம் முதலியவைகளினால் பூஜைசெய்து' என்றிவை முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஈச்வரஸம்ஹிதையில் 'நன்றாகப் பாகம் செய்யப்பட்டதாய் வ்யஞ்ஜனம் முதலியவைகளுடன் சேர்ந்த அன்னம் இருக்கட்டும். பகவானுக்கு ஸமர்ப்பிவிக்கும்பொழுது பகவானுடைய மந்திரங்களினால் பரிசுத்தம் செய்யப்பட்டவைகளாயும் காட்டில் உண்டானவைகளாயும் அந்தந்தக்காலங்களில் உண்டானவைகளாயும் இருக்கும் கீரை கிழங்கு பழம் முதலியவைகள் கொஞ்சமாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் விசித்திரங்களாயிருந்தாலும் கர்மங்களில் உபயோகிக்கத் தக்கவைகளாகின்றன. பகவானுக்கு நிவேதனம் செய்து கொடுக்கப்பட்டவைகள் பித்ருலோகத்தில் பித்ருக்களுக்கும் அவரவர் வாஸம் செய்யும் இடங்களில் தேவதைகளுக்கும் அம்ருதமாயிருக்கும் தன்மையை அடைகின்றன' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே மஹாபாரதத்தில் ஜ்ஞானகாண்டத்தில் மூன்றாவது அத்யாயத்தில் 'உபரிசரர் என்கிற ராஜா இருந்தார்' என்றாரம்பித்து 'பகவானுடைய முகத்தில் இருந்து உண்டானதான பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதியை அங்கீகரித்து தேவதைகளுக்கு எல்லாம் யஜமானனாகிய பகவானைப் பூஜித்தார். அதின் மிகுதியினால் அதற்குப் பிறகு அதை விபாகம் செய்து பிதாமஹர்களையும் பித்ருக்களையும் ரிஷிகளையும் ப்ராம்மணர்களையும் தன்னை ஆச்ரயித்தவர்களையும் (போஜனம் செய்வித்தார்)'

𑌪𑍍𑌰𑌾𑌪𑌣 𑌵𑌿𑌷𑌯𑌃 । ‘𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯’ 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑌾𑌚𑍍𑌚 । “𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌗𑍇𑌹𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌪𑌣𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌚𑌾𑌗𑍍𑌰𑌭𑍋𑌜𑌨𑌾𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌚𑍍𑌚 । 𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑌵𑍇𑌦𑌯𑍋𑌃 𑌶𑍇𑌷𑌶𑌬𑍍𑌦𑍋 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌮𑍍 । 𑌕𑌿𑌂𑌚 “𑌯𑌃 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑌾𑌲𑍇 𑌹𑌰𑌿𑌭𑍁𑌕𑍍𑌤𑌶𑍇𑌷𑌂 𑌦𑌦𑌾𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌿𑌤𑍃𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌚 𑌤𑌿𑌲𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑌿𑌶𑍍𑌰𑌮𑌾𑌕𑌲𑍍𑌪𑌕𑍋𑌟𑍀𑌃 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌸𑍁𑌤𑍃𑌪𑍍𑌤𑌾𑌃 ॥” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑌚𑌨𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 । 𑌅𑌤𑍋 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍇𑌨𑍈𑌵 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌕𑌰𑌣𑌸𑌂𑌭𑌵𑌾𑌚𑍍𑌚 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑌪𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑌸𑍍𑌯 𑌭𑍋𑌜𑍍𑌯𑌤𑍍𑌵𑌨𑌵𑌾𑌰𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 । 𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌹𑍁𑌤𑌿𑌕𑌰𑌣𑌮𑌪𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍇𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍—𑌅𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑌭𑌕𑍍𑌷𑌣𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌚𑍍𑌚 । 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌜𑌯𑌾𑌖𑍍𑌯𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 — “𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑌵𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌨𑌾 𑌕𑌨-

---

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலும் சேஷ (மிகுதி) என்னும் பதம் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட மிகுதியைப் பற்றியது. ‘பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் சொல்லப்படுகிற விதியை அங்கீகரித்து’ என்று ஆரம்பித்திருக்கிறபடியினாலும், ‘அந்த மஹாத்மாவாகிய ராஜாவினுடைய க்ருஹத்தில் சிறந்தவர்களான பாஞ்சராத்திர சாஸ்திரம் அறிந்தவர்கள் பகவானால் அமுது செய்யப்பட்ட நிவேதிதத்தை உயர்ந்த ஆஹாரமாக போஜனம் செய்கிறார்கள்’ என்று முடித்திருக்கிறபடியினாலும். பாஞ்சராத்திரசாஸ்திரம் அதற்கு மூலமான வேதம் இவைகளில் சேஷ என்னும்பதம் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதைப்பற்றியதாகவே ப்ரஸித்தமாய் இருக்கிறதென்று மற்றோர் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ‘எவன் ச்ராத்தகாலத்தில் பகவானால் ஸாப்பிடப்பட்ட மிகுதியை பித்ருக்களுக்கும் தேவதைகளுக்கும் பக்தியினால் கொடுக்கிறானோ, அதினாலேயே எள்ளுடன் கலந்து பிண்டத்தையும் கொடுக்கிறானோ அவனுடைய பித்ருக்கள் கோடிகல்பம் நல்ல த்ருப்தியை அடைகிறார்கள்’ என்றிவை முதலிய வசனங்களும் ஆங்காங்கு அறியத்தக்கவைகள். ஆகையினால் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதினாலே வைச்வதேவம் செய்வது ஸம்பவிக்குமாதலால் வைச்வதேவம் செய்பவர்களுக்கும் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதே ஸாப்பிடக்கூடியதாகும் என்பது மறுக்கப்படவில்லை. இத்தால் ப்ராணாஹுதி செய்வதும் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டதினாலே செய்யத்தக்கதாகும் என்பதும் ஏற்பட்டது—பகவானுக்கு நிவேதனம் செய்யப்படாததை ஸாப்பிடுவது சாஸ்திரங்களில் மறுக்கப்பட்டிருப்பதால். ஜயாக்ய ஸம்ஹிதையில் ‘ப்ராணாக்நி ஹவனம்

86259.

## ஓர் ஸந்தேஹம்.

வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,—

தாயாருடைய மரண ஆசௌசத்தின் நடுவில் (ஏழாவதுநாளில்) கநிஷ்டபுத்திரனுக்குப் பெண்பிறந்தால் மரணாசௌசத்தோடே வ்ருத்தி ஸூதகமும் கழிந்து அவனுக்கு சுத்தியுண்டாகி, பனிரெண்டாவதுநாள் ஸபிண்டீகரண ச்ராத்தம் செய்கிற அவனுடைய ஜ்யேஷ்ட ப்ராதாவுடன் கூடயிருந்து அவனும் ச்ரார்த்தத்தை நடத்தலாமா என்கிற விஷயத்தை ப்ரமாணபூர்வகமாக தீபிகைமூலமாய் பண்டிதாக்ரேஸரர்கள் க்ருபை செய்யுமாறு ஸவிநயம் ப்ரார்த்திக்கின்றனன்.

தஞ்சாவூர் }
24—4—26. }

ஓர் பாகவத தாஸன்.

ஸ்ரீ:

வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,—

ஐயா.

சென்னை ஸ்ரீவைஷ்ணவஸபையின் சார்பில் தங்களால் அனுப்பப்பட்ட வித்வான் காடாங்கேத்தி ஸ்ரீ. உப. வே. கோபாலாசார்யஸ்வாமிகள் உபந்யாஸத்தை 3-நாள் கேட்டு சந்தோஷித்த நாங்கள் ஷை ஸபையால் பிரசுரமாகிவரும் வேதாந்ததீபிகை என்னும் மாதாந்திர பத்திரிகையை வருஷம் 1-க்கு ரூபா 3 கட்டணங்கட்டி வரவழைக்க ஆஸ்தை கொண்டிருக்கிறோம். ஆகையால் கிருபைசெய்து மாதாந்திர பத்திரிகையை அடியிலகண்ட நாங்கள் அனுப்ப விரும்புகிறோம்.

வி. கிருஷ்ணய்யர், மிராசு, ராஜாமடம்.
ஆர். வி. விச்வநாத ராவ், மிராசு, ராஜாமடம்.

வி கிருஷ்ணய்யர்,
ராஜாமடம்.


### ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய) | ரூ. | ... | 1 | 4 | 0 |
| 2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய | | ... | 0 | 10 | 0 |
| 3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம் | | ... | 0 | 12 | 0 |
| ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம் | | ... | 1 | 4 | 0 |
| திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து | | ... | 0 | 12 | 0 |

திருப்புறம்பியம் போஸ்டு, }
கும்பகோணம். }

T. D. ராமஸ்வாமி நாயுடு.

## ராவ்ஸாஹிப் டில்லி ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி பண்டின் உபந்யாஸங்கள்.

இந்த ஸ்வாமியின் த்ரவ்யஸஹாயத்தால் தஞ்சாவூர்ஜில்லா பட்டுக்கோட்டை நாகப்பட்டணம் தாலுகாக்களில் உபந்யாஸம் செய்யும்படி ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீ. உ.வே. காடந்தேத்தி கோபாலாசார்யஸ்வாமி பின்வருமாறு அந்தந்த ஊர்களில் அந்தந்த உபந்யாஸங்களைச்செய்தார். அந்தந்த ஊர்களில் எல்லோரும் உபந்யாஸங்களைக்கேட்டு மிகவும் ஆநந்தித்தார்கள்.

| | | |
|---|---|---|
| க்ரோதன ஸ்ரீ பங்குனிமீ 22உ | புலிவலம் | அர்த்தபஞ்சகம். |
| அக்ஷய ஸ்ரீ சித்திரைமீ 4, 1உ | பட்டுக்கோட்டை | ஸீதாகல்யாணம். |
| ,, ,, 7, 8, 9உ | ராஜாமடம் | விபீஷண சரணாகதி, [வைதிகமதம், ஸ்ரீராமாவதாரம். |

ராஜாமடத்தில் செய்த உபந்யாஸ ஸங்க்ரஹம்

### விபீஷணசரணாகதி.

உலகில் உள்ள அந்தணரந்தியரெல்லை நின்ற அனைத்துலகும் உய்யும்படியான வகை சரணாகதி மார்கம் என்பதும், அந்த மார்கம் ஆதிகாவ்யத்தில் ஒவ்வொரு காண்டங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதில் பாலகாண்டத்தில் தேவதைகளால் சரணாகதி, அயோத்யாகாண்டத்தில் பரதசரணாகதி, ஆரண்யகாண்டத்தில் தண்டகாரண்ய வாஸிகளான அறுபதினாயிரம் ருஷிகளின் சரணாகதி, ஸுந்தரகாண்டத்தில் த்ரிஜடா சரணாகதியும், காகாஸுர சரணாகதியும் ப்ரதிபாதிக்கப்பட்டதென்று நிரூபித்து, வால்மீகியால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட சரணாகதி வேதத்திற்கு உபநிஷத்பாகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், இவ்விபீஷணசரணாகதி ப்ரகரணம் என்றும், இதில் சரணாகதி செய்யவேண்டியமுறையும் அவனிருக்கவேண்டிய முறையும், ஸமர்த்தனை காருணிகனானவனிடத்தில் செய்த ப்ரபத்தி பலாவிநாபூதம் என்பதையும், ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்யவர்ஜநம், கார்பண்யம், மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வ வரணமாகிய ஐந்து அங்கங்களினுடைய ஸ்வரூபமும், சரணாகதிதான் பலப்ரதமென்றும் இவ்வர்த்தம் எல்லாம் கேட்போர் மனமுருகும்படி கானரஸத்துடன் உபந்யஸிக்கப்பட்டன. இதைக் கேட்டவர்கள் ஆநந்தித்து தேசபக்தியுள்ள ராவ்ஸாஹிப் டில்லி, ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிக்கு நன்றிபாராட்டினார்கள்.